திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
டிசம்பர் 2020,
விலை ரூ.5/-



விநா வேங்கடேஸம் ந நாதோ ந நாத:
சதா வேங்கடேஸம் ஸ்மராமி ஸ்மராமி||
ஹரே! வேங்கடேஸ ப்ரஸீத ப்ரஸீத
ப்ரியம் வேங்கடேஸ ப்ரயச்ச ப்ரயச்ச||



மேதகு இந்தியக்குடியரசுத்தலைவர்
திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் தனது
துணைவியாருடன் 24-11-2020 அன்று
திருமலையில் திருவேங்கடமுடையான் மற்றும்
திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயாரை
தரிசித்தபோது















*காச்யச்ச பரமேஷ்வாஸ:*
*சிக$_2$ண்டீ$_3$ச மஹாரத$_2$: |*
*த்$_4$ருஷ்டத்$_3$யும்நோ விராடச்ச*
*ஸாத்யகிச்சாபராஜித: ||*

**அரசனே! சிறந்த வில்லாளியான
காசிராஜனும், மகாரதியான சிகண்டியும்,
திருஷ்டத்யும்னனும், விராட மன்னனும்,
தோல்வியே காணாத ஸாத்யகியும்
இவர்கள் எல்லோரும் எல்லாப்
பக்கங்களிலிருந்தும் தனித்தனியாகச்
சங்குகளை முழக்கினார்கள்**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–17*



*மாயனை மன்னு வடமதுரை மைந்தனை*
*தூய பெருநீர் யமுனைத் துறைவனை*
*ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை*
*தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை*
*தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது*
*வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க*
*போய பிழையும் புகுதருவான்நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்*

**மாயச் செயல்களையுடையவனும், நித்யமாகப் பெற்றுள்ள
வடமதுரைக்குத் தலைவனும், பரிசுத்தமாய் ஆழம் மிக்கிருக்கிற
தீர்த்தத்தையுடைய யமுனையாற்றங் கரையை
நிரூபகமாகயுடையவனும், இடைக்குலத்தில் விளங்கா
நின்றுள்ள மங்களதீபம் போன்றவனும், தாயாகிய தேவகிப்
பிராட்டியின் வயிற்றை விளங்கச் செய்தவனுமான கண்ண
பிரானை நாம் பரிசுத்தியுள்ளவர்களாய்க்கிட்டி நல்ல மலர்களைத்
தூவி வணங்கி வாயாரப்பாடி நெஞ்சார தியானம் பண்ணி
அவ்வெம்பெருமான் திருநாமங்களைச் சொன்னால் நம்
பாவங்களும் நெருப்பிலிட்ட பஞ்சு போல உருமாய்ந்துபோகும்.**

*- திருப்பாவை 5*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் – "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




மலர் 51 இதழ் 07

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| **திருமலையில் அத்யயன உத்ஸவம்** | 7 |
| - ஸ்ரீ உ.வே. கிடாம்பி நாராயணன் ஸ்வாமி, சென்னை. | |
| **மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...** | 11 |
| - ஸ்ரீ உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம். | |
| **ஆனந்த நிலையமாம் திருமலை திருக்கோயில்** | 13 |
| - திருமதி பா. காயத்ரி, கேரளா. | |
| **திருப்பாவையில் நப்பின்னை** | 16 |
| முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம். | |
| **ஸ்வாமி புஷ்கரணி** - திரு.டி.டி. வரதராஜன், சென்னை. | 20 |
| **ஆயுர்வேதமும் ஆன்மீகமும்** | 21 |
| - டாக்டர் ஜெ.நிகிலா வெங்கட், சிறுமுகை. | |
| **தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** | 24 |
| - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | |
| **அநுமனின் பெருமை** - திருமதி குமுதா வரதராஜன், சென்னை. | 51 |
| **108 திவ்வியதேச வைபவம் – தென்திருப்பேரை** | 56 |
| - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | |
| **அன்னமய்யா வாழ்க்கை வரலாறு** | 59 |
| - திருமதி ராதாராமநாதன், திருப்பதி. | |
| **அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : மற்ற தானத்திற்கும் கன்னிகாதானத்திற்கும் உள்ள வேறுபாடு** | 61 |
| - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | |
| **ஸ்ரீமத்பாகவத கதை சாகரம் – ஸ்ரீநரசிம்ம அவதாரம்** | 63 |
| - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** | 66 |
| - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | |
| **பகவத் கீதை–இளைய சமுதாயம் – உயர்ந்த லட்சயம் உன்னத சுவை** | 70 |
| - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | |
| **ஆயுர்வேதம்–சித்தரத்தை** | 72 |
| -முனைவர் பா. தனஞ்செழியன், சென்னை. | |


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : திருவேங்கடவன் ( திருமலை )

பின்னட்டை : கோதை அலங்காரத்தில் கோவிந்தன் (திருமலை).


*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
*பிரதான ஆசிரியர் :*
**பேராசிரியர்** K. **ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு **sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

உங்களுடன்...

# கண்ணனும் ஆண்டாளும்

பரம் பொருளான மகாவிஷ்ணு பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் ஐந்து நிலைகளில் காட்சியளிக்கின்றார். அதாவது பரம் என்னும் வைகுந்தத்திலே பரவாசுதேவனாகவும், வியூகம் என்னும் திருப்பாற் கடலிலே பையத்துயின்ற பரமனாகவும், விபவம் என்னும் அவதாரத்தில் இராமகிருஷ்ணர்களாகவும், அனைத்து பக்தர்களாகிய இதயக் கமலங்களில் அந்தர்யாமியாகவும், திவ்ய தேசங்கள் தோறும் அர்ச்சை வடிவிலும் எழுந்தருளியுள்ளார். இவற்றில் விபவம் எனும் அவதார நிலையில் அனேக அவதாரங்கள் எடுத்து தம் பக்தர்களை காத்தருளினார். எம்பெருமானுடைய அவதாரங்களிலேயே ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தைத் தான் பூரண அவதாரமாக பூர்வாசார்யர்கள் போற்றுகின்றனர். இந்த அவதாரத்தில்தான் அனைவரையும் தன் மாய லீலைகளால் தன் வயப்படுத்தியுள்ளார்.

மகாவிஷ்ணு எடுத்த அவதாரங்களிலேயே ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில்தான் லீலா விநோதசேஷ்டிதங்களும் அதிகமுள்ளன. குன்றினைத் தூக்கி குடையாகப் பிடித்ததும், காளிங்கன் மீதேறி நடனம் புரிந்ததும், ததிபாண்டவ னுக்கு முக்தியளித்ததும் இவ்வவதாரத்தில் தான். அதுமட்டுமின்றி அர்ஜுனனுக்கும், உத்தவருக்கும் உபதேசம் செய்ததின் மூலம் பிறருக்கு சேவை செய்வதே மேலான பாக்யம் என்பதை ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா சுட்டி காட்டியிருக் கிறார். மகாபாரத போரிலே மண்ணாசையினால் ஏற்படுகின்ற விளைவுகளையும் சுட்டி காட்டி, மண்ணாசையை துறத்தல் வேண்டும் என்பதற்கான அறிவுருத்தலையும் நிகழ்த்தினார். ஐந்தாவது வேதமாகப் போற்றப்படும் மகாபாரதத்தின் மூலம் மானிடர்கள் தம் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்களுக்கான வழிகாட்டினை கீதை உபதேசத்தின் வாயிலாக அருளியுள்ளார். பக்தனை உத்தேசித்து பகவானால் அருளப்பட்டது பகவத்கீதை எனில் பக்தன் பகவானை உத்தேசித்து சொன்னது ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமமாகும். இவ்விரண்டும் ஒரு சேர இந்த அவதாரத்தில் நிகழ்ந்த பெரும் அதிசயமாகும்.

அக்கண்ணனையே அடைய எண்ணிய ஆண்டாளும் கண்ணன் மீது அதீத பக்தி கொண்டு சிறு வயது முதலே தந்தையிடம் கண்ணனின் அவதார கதைகளைக் கேட்டு வளர்ந்ததால் கண்ணன் மீது பக்தி ஏற்பட்டது. அந்த பக்தியே காதலாக மாறி கண்ணனையே மணாளனாக அடைய வேண்டும் எனும் எண்ணத்தை உண்டாக்கியது. எனவே தான் ஆண்டாளும் ***"மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்"*** (நாச்.திரு.1–5) என்று கூறினாள்.

***"உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான்"*** (திருவாய் மொழி 6.7.1) என்று நம்மாழ்வார் பாசுரமிடுவது போன்று, ஆண்டாளும் கண்ணனையே மணக்க கனாக்காண்கின்றாள். பகவத் கீதையில் கண்ணன் "என்னை சரணடை" என்று கூறிய சரணாகதி தத்துவத்தையே ஆண்டாளும் தம் பாசுரங்களில் விளக்கியுள்ளாள். ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்கள் பக்தியின் மேன்மை, கற்பனை, இலக்கிய நயம், அறிவியல் தத்துவம் என தன்னிகரின்றித் திகழ்கின்றன. ஆண்டாள் காட்டும் பாவை நோன்புக்கான விரத மிருத்தல் எல்லாப் பெண்களும் கடைபிடிக்கக் கூடிய எளிமையானதாகும். புறத்தூய்மையாலும் அகத் தூய்மையாலும் இறைவனை அடைய முடியும் என்று பாசுரமிடுகிறாள்.

மதுரமான மார்கழி மாதத்தில் ***"மாதங்களில் நான் மார்கழி"*** ஆகிறேன் எனக் கூறிய கண்ணனையும், மார்கழி மாதம் நோன்பிருந்து கண்ணனை அடைந்த ஆண்டாளையும் ஒரு சேர போற்றித் துதிப்போம்.





# திருமலையில் அத்யயன உத்ஸவம்

ஸ்ரீ உ.வே. கிடாம்பி நாராயணன் ஸ்வாமி,
சென்னை, 9444918374.

ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரன், இந்த சம்சாரத்தில் ஈடுபட்டுத் துன்பப்படும் தனது அடியார்களைக் காப்பாற் றுவதற்காக, பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்ற ஐந்து நிலைகளில் எழுந்தருளி யிருக் கிறான். கோயில்களிலும், வீடுகளிலும் எல்லாக் காலங் களிலும், எல்லா இடங்களிலும் எல்லாராலும் தொழப் படும் எம்பெருமான் திருவுருவமே அர்ச்சாவ தாரம் எனக் கூறப்படுகிறது. "பூர்த்தியையும், ஸ்வாதந் திர்யத்தையும் குலைத்துக் கொண்டு, தன்னை அநாதரிக்கிறவர்களைத் தான் ஆதரித்து நிற்கிற இடம் அர்ச்சா வதாரம்" என்று வைணவ ஆசார்யரான பிள்ளை உல காரியர் அருளிச் செய்துள்ளார்.

அர்ச்சாவதார திவ்ய தேசங்கள் 108 என்று நம் பெரியவர்கள் கொண்டாடுகிறார்கள். அவைகளில், கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாரா யணபுரம் முக்கியமானவை என்று கொண்டாடப்படு கிறது. இவற்றில் நடுநாயகமாய், மண்ணோர்க்கும், விண்ணோர்க்கும் தஞ்சமாய், ஜாதி மத வேறுபாடு இல்லாமல், எல்லா நாட்டவர்களும், எப்பொழுதும் வணங்கும் திவ்ய தேசம் திருவேங்கடம் என்ற திரு மலை திவ்யதேசம். "திருவேங்கடத்தைப் போல் வேறு ஒரு திவ்ய தேசம் எங்கும் இல்லை'', "திருவேங்கட முடையானுக்கு நிகரான தெய்வம் எங்கும் இல்லை" என்று வராஹ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"வேம்" என்ற சொல்லுக்கு, "எல்லா பாபங்களும்" என்று பொருள். "கட" என்ற சொல்லுக்கு, "எரித்தல்" என்று பொருள். ரிக்வேதத்தில் திருவேங்கடமும் எம்பெருமா னாகிய ஸ்ரீநிவாஸனும் வர்ணிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

*''ஆராயிகாணே விகடே கிரிம் கச்ச ஸ்தான்வே
சிரிம்பிடஸ்ய ஸத்வபி: தேபிஷ்ட்வா சாதயாமஸி''*

என்பதே ரிக்வேதம்.

பண்டைய காலங்களிலேயே திருவேங்கடத்தில் விழாக்கள் நடந்தன என்பதற்கு அகநானூறு என்ற தமிழ் இலக்கிய நூலில் சான்றுகள் உள்ளன. மாமூலனார் என்ற தமிழ் புலவர் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

*"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான் -*
*மழபுலம் வணக்கிய*
*மாவன் புல்லி - விழவுடை விழுச்சீர் வேங்கடம்*
*பெறினும் பழகுவர் ஆதலோவரிதே"*

வைணவ ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில், மிகவும் முக்கியமாகக் கருதப்படுவது அத்யயன உத்ஸவம், இதையே திருவாய்மொழித் திருவிழா என்றும், நாலாயிர திவ்யப் பிரபந்தத்திருவிழா என்றும் கூறுவர். அத்யயனம் என்றால் கற்றுக் கொள்வது, சொல்லிப் பார்ப்பது, படிப்பது என்று பொருள். ஆசார்யரிடமிருந்து, செவிவழியாக வேதத்தைக் கேட்டு, மறுபடியும் சொல்லிப் பார்ப்பதற்கு அத்யயனம் என்று பெயர். வருடத்தில் சில காலம் நாம் வேதம் ஓதுவதில்லை. இதற்கு அநத்யயனம் என்று பெயர். அநத்யயன காலத்திலேயே, நாம் அத்யயன உத்ஸவம் கொண்டாடுவது வழக்கம். குருகூர் சடகோபனான நம்மாழ்வார் பரமபதம் சென்று அடைந்த நாளை, அத்யயன உத்ஸவமாகப் போற்றிக் கொண்டாடுவது நம் ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாய வழக்கம். எம்பெருமான் திருவடிகளில் ஆத்மாவை சமர்ப்பித்து உஜ்ஜீவிக்கும் மோக்ஷ உத்ஸவம் என்றும் பெயர் உண்டு. பகல் பத்து, இராப்பத்து உத்ஸவம் என்றும் கூறுவர்.

### திருமலையில் அத்யயன உத்ஸவம் :

வைணவ ஆசார்யரான இராமாநுஜர் திருவேங்கடத்தில் எம்பெருமானுக்கு நடத்தப்படும் உத்ஸவங்களை முறைப்படுத்தினார். பகல் பத்து, இராப்பத்து, ஸ்ரீவைகுண்ட ஏகாதசி என்று 21 நாட்கள் எல்லா வைணவத் தலங்களிலும் திருஅத்யயன உத்ஸவம் கொண்டாடப்படுகிறது. ஆனால், திருமலையில் மட்டும் 24 நாட்கள் இந்த உத்ஸவம் நடைபெறுகிறது. ப்ரக்ருதி மண்டலம் 24 தத்துவங்கள் என்பதால், 24 நாட்கள் கொண்டாட திருமலையப்ப ஸ்வாமி அருள்பாலித்தான் என்றும் கூறலாம். 24 நாட்கள் நடக்கும் இந்த உத்ஸவம், ரங்க மண்டபத்தில் நடைபெறும். உத்ஸவ மூர்த்தியான மலையப்ப ஸ்வாமி, மூலவரான திருவேங்கடமுடையானிடம் நியமனம் பெற்றுக் கொண்டு, உத்ஸவம் நடக்கும் மண் டபத்திற்கு எழுந்தரு ளுவார். மலையப்ப ஸ்வாமி, சேனை முதலியார், இராமாநுஜரோடு சேவை சாதிப்பார். உடையவரின் பிரதிநிதியாக பெரிய ஜீயர் ஸ்வாமிகள், சிறிய ஜீயர் ஸ்வாமிகள், ஏகாங்கிகள், ஸ்ரீவைஷ்ணவ அடியார்கள் ஸ்வாமி முன்பு வீற்றிருப்பார்கள்.

திருவரங்கத்தில் திருஅத்யயன உத்ஸவம் தொடங்கும் பொழுது, திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகம் அடியார்களால் விண்ணப்பிக்கப்படுகிறது. *"எந்தை தளிர்புரையும் திருவடி என் தலை மேலவே"* என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார். பெருமாள் முன்பு வ்யாக்யானத்துடன் இப்பிரபந்தம் சேவிக்கப்படுகிறது. ஒரு நூலிற்கு முன்னுரை அமைவது போல், திருஅத்யயன உத்ஸவத்திற்கு இந்த திருநெடுந்தாண்டக உத்ஸவம் அமைகிறது.

திருவேங்கடத்தில், திருஅத்யயன உத்ஸவம் ஆரம்பிக்கும் பொழுது, இயற்பா அடியார்களால் விண்ணப்பிக்கப்படுகிறது. நாலாயிர பிரபந்தத்தை இசைப்பா என்றும், இயற்பா என்றும் நம் ஆசார்யர்கள் வகைப்படுத்தினர். இயற்பா, திருவேங்கடவன் பெருமையை அதிகமாகப் பேசுவதால், இயற்பா முழுவதும் திருவேங்கடவன் பிரபந்தம் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். எனவே தான் இயற்பா தொடக்கம் ஆகிறது.

*"தொழுவார் வினைச்சுடரை நந்துவிக்கும்*
*வேங்கடமே"*
*"வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே"*
*"மின்னென்று புற்றடையும் வேங்கடமே"*
*"விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய்"*
*"மண்ணளந்த சீரான் திருவேங்கடம்"*

என்று பொய்கையாழ்வார் பாடியுள்ளார்.





"வேயோங்கு தண் சாரல் வேங்கடமே"

"மனத்துள்ளான் வேங்கடத்தான்"

"அளவரிய வேதத்தான் வேங்கடத்தான்"

"வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு"

"மணி வேங்கடவன் மலரடிக்கே"

என்று பூதத்தாழ்வார் பாடியுள்ளார்.

"நாற்பால வேதத்தான் வேங்கடத்தான்"

"விளங்கொலி நீர் வேங்கடத்தான்"

"வெண்கோட்டு முத்து உதிர்க்கும் வேங்கடமே"

"வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே"

என்று பேயாழ்வார் பாடியுள்ளார்.

பொங்கும் பரிவாலே, வில்லிபுத்தூர் பட்டர்பிரான் அருளிச் செய்த திருப்பல்லாண்டு விண்ணப்பம் செய்து, அருளிச் செயலை தொடங்குகின்றார்கள். திருஅத்யயன உத்ஸவம் தொடங்கி, பத்தாம் நாள் அன்று, மலையப்ப ஸ்வாமி, மூலவரான திருவேங்கடவன் சந்நிதிக்கு எழுந்தருளுவார். துவாரபாலகர்கள் அருகே எழுந்தருளியவுடன் சிறிய சாற்றுமுறை நடைபெறும். திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருகுறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகப் பாசுரங்கள் விண்ணப்பம் செய்யப்படும்.

அடுத்த நாள் முதல், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி விண்ணப்பம் தொடங்கப்படும். இராப்பத்து அன்றுதான் தொடங்குகிறது. 10 நாட்கள் ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி பாசுரங்கள் வைணவ அடியார்கள் விண்ணப்பம் செய்வார்கள். உத்ஸவம் தொடங்கி, 21ஆம் நாள் மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு விண்ணப்பிக்கப்படும்.

அடுத்த நாள், ஸ்வாமி இராமாநுஜர் மூலமூர்த்தியான திருவேங்கடவன் சந்நிதிக்கு எழுந்தருளுவார். அப்பொழுது, அடியார்கள் திருவரங்கத்து அமுதனார் அருளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதி பாசுரங்களை விண்ணப்பம் செய்வார்கள். 23ஆம் நாள் வராஹப் பெருமாள் சந்நிதியில் அத்யயன உத்ஸவம் நடைபெறும். அன்று அடியார்கள் கோயில் திருவாய்மொழியை விண்ணப்பம் செய்வார்கள்.

24ஆம் நாள் "தண்ணீர் அமுது" என்ற உத்ஸவம் நடைபெறும். நம்பெருமாளுக்கு ஜீயர்புரம் உத்ஸவம் போல், மலையப்ப ஸ்வாமிக்கு தண்ணீர் அமுது உத்ஸவம் நடை பெறும். இந்த உத்ஸவத்தைப் பற்றி, ஒரு ஐதிக்யத்தை பெரியவர்கள் கூறுகிறார்கள். இராமாநுஜருடைய ஆசார்யர் பெரிய திருமலை நம்பிகள் திருமலையில், திருவேங்கடவனுக்கு திருமஞ்சன தீர்த்த கைங்கர்யம் செய்து வந்தார்.

ஒரு நாள், இவர் தீர்த்தம் கொண்டு வரும் பொழுது, திருவேங்கடவன் சிறுவனாக வந்து நின்றான். "எனக்கு தீர்த்தம் வேண்டும். கொடுக்க முடியுமா?" என்று நம்பிகளிடம் கேட்டான். நம்பி கொடுக்காமல், கைங்கர்யத்திற்கு விரைந்து சென்றார். தீர்த்தம் கொண்டு செல்லும் பானையில், சிறிய த்வாரத்தை இட்டு, சிறுவன் தீர்த்தத்தைப் பருகிக் கொண்டே பின்னே வந்தார். நம்பியும், பானையின் கனம் குறைந்து வருவதைப் பார்த்து, திரும்பிப் பார்த்தார். சிறுவனைக் கோபித்தார். எம்பெருமானும் உகந்து நம்பிகளுக்கு சேவை சாதித்தான். இதை இராமாநுஜர் மனதில் நினைத்தார். திருஅத்யயன உத்ஸவத்தில் இந்த வைபவத்தைக் கொண்டாட வேண்டும் என்று கட்டளை இட்டார். இன்றும் பெரிய திருமலை நம்பி வம்சத்து ஆசார்யர்கள் இந்த கைங்கர்யத்தை சிறப்பாக நடத்துகிறார்கள். இந்த தீர்த்த உத்ஸவத்தையும் சேர்த்து, 24 நாட்கள் திருவேங்கடவனுக்கு திரு அத்யயன உத்ஸவம் நடைபெறுகிறது. அடியார்களான நாமும், திருமலையப்பன் அத்யயன உத்ஸவத்தில் கைங்கர்யம் செய்து, எம்பெருமான் அருளைப் பெறுவோம்.




# நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | விசதவாக்சிகாமணிகள் |
| ஆசிரியர் | : | டாக்டர் மாடபூசி வரதராஜன் |
| கிடைக்குமிடம் | : | டாக்டர். எம்.வரதராஜன் |
| | : | எண்-5/3, முதல் தளம், நாட்டு வீராட்சி தெரு, |
| | : | மைலாப்பூர், சென்னை - 600 004. |
| அலைபேசி, விலை | : | 98418 84972, ரூ.65/- |

மணவாள மாமுனிகளின் 650–வது திருவவதார உத்ஸவ வெளியீடாக இவ்வாண்டு ஆவணி சுக்ல சதுர்த்தி (மாமுனிகளின் பகவத்விஷய காலக்ஷேப தொடக்க நாள்) முன்னிட்டு இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. இப்புத்தகம் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. முதற்பகுதி மணவாள மாமுனிகள் வாழ்க்கையில் வாக் வைபவம் என்றும், இரண்டாவது பகுதி மாமுனிகள் வாக் சாதூர்யத்தை 14 தலைப்புகளில் எடுத்துக்காட்டுவது. ஒவ்வொரு தலைப்பும் ஆழ்கடலில் மூழ்கி முத்துக்களை எடுப்பதுபோல் மணி (மாணிக்கங்)களைக் கோவை செய்யப்பட்டுள்ளது.

முதலில் மாமுனிகளுக்கு “விசதவாக்சிகாமணி” என்னும் விருது அவருக்கே பொருந்தும் என்பதைக் காட்டப்படுகிறது (ப.1). அடுத்ததாக “முப்பத்தாறாயிரப் பெருக்கர்” (ஈட்டுப்பெருக்கர்) என்ற திருநாமமும் மாமுனிகளின் ஸ்ரீபாஷ்ய ஆசார்யர் வியந்து சூட்டினதை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (ப.5). மாமுனிகளின் சிஷ்யர்களான கந்தாடை அண்ணன், எறும்பியப்பா, ப்ரதிவாதி பயங்கர அண்ணன் போன்றோர் மூலமாகவும் மாமுனிகளின் விசதவாக் தன்மையை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ள பாங்கினை அனுபவிக்க முடிகிறது (பக்.5–12). பரம மூல காரணன் நாராயணன் என்பதை மாமுனிகளின் விசதவாக்கினாலும் கம்பீரமாகவும் நம்பிள்ளையின் திறன் கொண்டு நிலை நிறுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. இங்கு திருவள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளை நினைக்கவுள்ளது (பக்.23–26)

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு” என்பதேயாம்.

கீதாபாஷ்ய ப்ரக்ரியையில் “பேரளவுடைய அர்ஜுனன் நிரூபித்தான்” என்றும் நம்பிள்ளைக் காட்டியதைக் குறிப்பிட்டு “பேரளவாவது மஹாஞானம்” என்பதை ஆசிரியர் விளக்கம் செய்துள்ளார் (ப.32). ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரக்ரியை மூலம் யமநியமாதிக்ரமம் என்பதை மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஸ்ரீராமாயண ப்ரக்ரியையின் வாயிலாக ஸ்ரீராமனின் ஔதார்ய குணத்திற்கு ஒரு வரலாற்றையே விவரித்துள்ளார் ஆசிரியர் (பக்.30–31). இவற்றை நோக்கும் போது “உரைக்கு உரை செய்த உத்தம உரைகாரர்” என்று காஞ்சி ஸ்வாமியைப் போற்றுவதுபோல, விசதவாக்கிற்கு விசத (பரந்த) உரை அமைந்துள்ளது. ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் அனந்தன் என்ற திருநாமம் ஸ்ரீவிஷ்ணுவுக்கே பொருத்தமானது என்பதை விஷ்ணு சித்தீயம் மூலம் நம்பிள்ளை உரைத்ததை மாமுனிகள் நிலை நிறுத்தியுள்ளதை அனுபவிக்கமுடிகிறது (பக்.40–41).

பல சொல்லி என்? விசதவாக் மணிகள் என்பதைப் பரந்தவாய்மொழியான மாணிக்கமென்றே சொல்ல வேண்டும். இப்புத்தகத்தைப் படிப்பவர்களுக்கு எம்பெருமானின் குணங்கள் எம்பெருமானாரின் பரந்த திருவுள்ளம், நம்பிள்ளை உரைத்திறன், மாமுனிகளின் விசதமான வாய்மொழி என்பனவற்றைக் கண்கூடாக அனுபவிக்கக் கடவர்கள் என்பது திண்ணம்.

–டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.



# மாமன்னர் களும்... மலை மேல் நிற்பவனும்...

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
ஸ்ரீ.உ.வே.அ.கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி,
திருவரங்கம்,
98842 89887.

கந்தாடை இராமாநுசமுனி தம்முடைய சொந்த செலவில் 2 பாசன வாய்க்கால்களை அமைத்து குன்ற பாக்கம், பருத்தி புதூர் ஆகிய ஊர்களில் அமைந்திருந்த திருவிடையாட்ட பூமிகளை நல்ல விளை நிலங்களாக்கி அதிலிருந்து பெறப்பட்ட வருவாயைக் கொண்டு திருவேங்கடமுடையானுக்கு தோமாலை சேவையில் (மலர்களால் அலங்கரிக்கப்படும் நிகழ்ச்சி) திருவடி விளக்கம் செய்திடும் போது நடைபெறும் தத்யோதன சந்தியில் நான்கு "மலைக்கினிய நின்றான்" மரக்காலால் சம்பா அமுதுபடியும், தயிருடன் ஒரு ஆழாக்கு சுக்கும், ஒரு ஆழாக்கு ஏலப்பொடியும், ஒரு ஆழாக்கு மிளகும், ஒரு நாழி வெல்லத்தைத் தூவியும், அந்தந்த காலங்க ளில் விளையும் காய்கறிகளையும், தேங்காயையும் சேர்த்து, ஒரு ஆழாக்கு நெய்யும், எலுமிச்சம் பழத்தோடு கூடிய இஞ்சி ஊறுகாயையும், கடுகு அரைத்துவிட்ட வடுமாங்காயையும் இவற்றுடன் 200 வெற்றிலையும், 100 பாக்குக்கொட்டைகளும் சமர்ப்பித்தார்.

திருநாள் உத்ஸவங்களிலும் (ஆடித்திருநாள் தொடங்கி சித்திரைத் திருநாள் ஈறாக) 7–ஆம் திருநாளன்று தெற்கு வீதியின் மேற்கு பகுதியில் இராமா நுஜ அய்யன் தெருவில் திருவேங்கடமுடையான் எழுந் தருளும்போது 14 மலைக்கினிய நின்றான் மரக்கால் அரிசியோடு 14 நாழி நெய்யும், 700 பலம் வெல்லமும், 3 உழக்கும் ஒரு ஆழாக்கும் கொண்ட மிளகும், ஜீரகமும், தேங்காயும் கொண்ட அமுதுபடி சமர்ப்பித்திட ஏற்பாடு கள் செய்யப்பட்டன. இந்தத் தளிகைக்கு அப்பப்படி தளிகை என்று பெயர் வழங்கியது, பங்குனி அமாவாசை, வசந்த பௌர்ணமி ஆகிய காலங்களில் திருமலையில் எழுந்தருளியுள்ள அழகியசிங்கருக்கு (வேங்கடத்து அரிக்கு) நடைபெறும் திருமஞ்சனத்திற்கும், கந்தாடை இராமாநுச ஐயங்காருடைய உபயமாகத் திருப்பணி யாரங்களும், அப்பப்படியும், திருக்கணாமடையும் சமர்ப் பிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கிழக்கிந்திய கம்பெனியின் ராபர்ட் க்ளைவ் எனும் தளபதி, வந்தவாசியில் நடந்த சண்டையில் தான் வெற்றி

## கீதையின் பொன்மொழிகள்



- ♦ எந்நிலையிலும் மனவலிமையை இழக்காதே
- ♦ உடல் அழியும்: ஆத்மா அழியாது என்று உணர்க.
- ♦ ஆத்மா இயற்கையில் அறிவே உருவானது. இன்பமயமானது என்று அறிக.
- ♦ சண்டைக்களத்தில் இருந்து ஓடுவது கோழைத்தனம்; வாழ்க்கைக் களத்தில் தைரியமாக நின்று வெற்றி கொள்.
- ♦ இன்பம் துன்பம், லாபம் நஷ்டம், வெற்றி தோல்வி ஆகியவற்றை சமமாக நினைக்க மனத்தைப் பழக்கு.
- ♦ உனக்குரிய செயலைச் செய்; பயனைக் கருதாதே; செய்யாமல் இருக்காதே.
- ♦ புலன்களை அடக்க அவற்றைக் கண்ணனின் அழகிய திருமேனியில் செலுத்தி தியானம் செய்.
- ♦ நான் செய்கிறேன் என்ற எண்ணத்தைத் துறந்து பற்றில்லாமல் உன் கர்மங்களைச் செய்.
- ♦ ரஜோகுணத்தால் உண்டாகும் காமத்தையும், கோபத்தையும் பகைவனாக எண்ணி வெற்றிகொள்.
- ♦ பகவான் எப்பிறவி எடுத்தாலும் அவன் பெருமைகளில் ஒன்றுகூடக் குறைவதில்லை என்று உறுதிகொள்.

பெற்றதற்காக அருளாளப்பெருமாளுக்கு ஒரு மகர கண்டிகை என்னும் பெரிய பதக்கம் முதல் சிறிய பதக்கம் வரை அடங்கிய ஹாரத்தை காணிக்கையாகச் செலுத்தினார்.

பிரதிவாதி பயங்கரம் குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு அனந்தாசார்யர் என்பவர் பெருமாளுக்கு வைரத்தினாலான அபயஹஸ்தம் 21 ஆம் நூற்றாண்டில் சமர்ப்பித்து உள்ளார்.

ப்ளேஸ் என்னும் செங்கற்பட்டு கலெக்டராகப் பணி புரிந்தவர் பெருமாளுக்கு தலையில் சமர்ப்பிக்கக் கூடிய நகைகளை அளித்துள்ளார். அல்லூரி வெங்கடாத்ரி என்பவர் ஒரு தங்கத்தினாலான கொண்டையும் மற்றும் பல ஆபரணங்களையும் சமர்ப்பித்து உள்ளார்.

வேறு செய்திகள் – திருவேங்கடமுடையானுக்குப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை புழுகு காப்பு முறை கி.பி. 1496 – இல் நடந்தது. பின்னர், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அது நடைபெற வேண்டும் என்று கி.பி. 1534 – இல் ஏற்பாடு செய்யப்பட்டது. இது பெருமானுக்குப் புனுகுக் குழம்பால் காப்பிடும் முறையாகும். இப்புனுகு, மிதித்த புழுகு எனப்பட்டது. பலவகைப்பட்ட வாசனைப் பொருள்களைக் கலந்து செய்யப்பட்டமையால் இவ்வாறு கூறப்பட்டது, இப்புழுகு காப்பு "புளிக்காப்பு" எனத்தவறாக வழங்கப்படுகிறது.

சாளுவ நரசிம்மன் காலத்தில், முகமதியர் கலகம் நேர்ந்தது, அப்போது தான் கோவிந்த ராஜர், ஆழ்வார், எம்பெருமானார்களோடு திருவேங்கடமுடையானும் பாபவிநாச தீர்த்தத்திற்கு அருகில் ஒரு மறைவான குகையில் வைக்கப்பட்டதால், அங்கு ஓராண்டு திருவாராதனம் கொண்டருளினார்கள்.

பாமினி ராஜ்யத்து சுல்தான் மூன்றாம் மகமதுஷா என்பவன் கி.பி. 1483 – 84 – ல் விஜய நகர இராஜ்யத்தைக் கைப்பற்றப் படையெடுத்து வந்த போது இச்செய்தி நிகழ்ந்திருத்தல் வேண்டும். அப்போது சாளுவ நரசிம்மன், பெரிய பெருமாளின் பாதுகாப்புக்காகக் கல்வேலி ஒன்று கட்டிவைத்தான் என்று தெரிகிறது. அக்கல்வேலி எது என்று இப்போது புலனாகவில்லை.

மேலும் வளரும்...





# ஆனந்த நிலையமாம் திருமலை திருக்கோயில்

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஆங்கில மூலம் : திருமதி ஜெ.சி. ஞானபிரசுனா

தமிழ் வடிவம் : திருமதி பா.காயத்ரி, 9744657115

### அங்குரார்ப்பண மண்டபம்:

தங்கக் கிணற்றின் தெற்கு பாகம் அமைந்துள்ள இம்மண்டபத்தில்தான் பிரம்மோத்ஸவம் துவக்கமாக அங்குரார்ப்பண உத்ஸவம் நடைபெறுகிறது. இங்கு தான் பக்தர்களுக்கு தீர்த்தம் மற்றும் சடாரி வழங்கப்படுகிறது.

### யாகசாலை :

நித்ய மற்றும் பிரம்மோத்ஸவ ஹோமம் நடைபெறும். இவ்விடம் அங்குரார்ப்பண மண்டபத்தின் அருகில் அமைந்துள்ளது.

### நாணய பரக்காமணி:

விமான பிரதக்ஷிணத்தின் மேற்கு பகுதியிலுள்ள இவ்விடத்தில்தான் நாணயங்கள் பிரித்து எண்ணப்படுகின்றன.

### ரூபாய் பரக்காமணி :

விமான பிரதக்ஷிணத்தின் மேற்கு பகுதியிலுள்ள இவ்விடத்தில்தான் ரூபாய், நகை முதலியவை எண்ணப்படுகின்றன.

### சந்தன அறை :

விமான பிரதக்ஷிணத்தின் வடமேற்கு திசையிலுள்ள இவ்வறையில்தான் பகவானுக்கு வேண்டிய சந்தனம் அரைக்கப்படுகின்றது.

### ஆனந்த நிலைய விமானம் :

மகாவிஷ்ணுவின் கட்டளைபடி கருடர் வைகுண்டத்திலிருந்து கொண்டு வந்த இவ்விமானத்திற்கு ராஜா தொண்டைமான் தங்கத் தகடுகளைப் பதித்தார்.



சங்கீர்த்தன பண்டாகரம்



விமான வேங்கடேஸ்வர ஸ்வாமி



**விமான வேங்கடேஸ்வர ஸ்வாமி :**

ஆனந்த நிலைய விமான கோபுரத்தில் ஸ்ரீவேங்க டேஸ்வர ஸ்வாமி சிறிய வடிவில் நின்ற கோலத்தில் விமான வேங்கடேஸ்வரராகக் காட்சியளிக்கிறார்.

**பதிவேடு அறை :**

பகவானைச் சார்ந்த அனைத்து பதிவேடுகள் இங்கு வைக்கப்படுகின்றன.

**சபா-அறை (சபேறா) :**

சபா என்றால் ஆஸ்தானம். கொலுவு. இங்கு தான் வெள்ளி விளக்கு முதலிய விலையுயர்ந்த பொருட்கள் காக்கப்படுகின்றன.

**சங்கீர்த்தன பண்டாகரம் :**

"செப்பு-தகடு அறை" என்றழைக்கப்படும் சபா அறை யின் பக்கத்தில் அமைந்துள்ள இவ்வறையில் தான் தாள்ளபாக்க கவிஞர்களின் சங்கீர்த்தனைகள் பொறிக்கப் பட்ட ஏடுகள் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வறையின் சுவ ரில் தாள்ளபாக்க அன்னமய்யா மற்றும் அவருடைய மகன் பெத்த திருமலசார்யாவின் சிற்பங்களைக் காணலாம்.

**முக்கோட்டி பிரதக்ஷிணம் :**

கண்டா மண்டபத்தை தாண்டி ராமர் ஆலயத்திலி ருந்து துவங்கும் இவ்வாயிலை "வைகுண்ட துவாரம்" என்றழைப்பர். வைகுண்ட ஏகாதசியன்று மட்டுமே இவ் வாயிலைத் திறப்பர்.

மேலும், விமான பிரதக்ஷிணத்தின் வடக்கு பகுதியில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமிக்கும், ஸ்ரீராமாநுஜருக்கும் சன்னதிகள் அமைந்துள்ளன. உண்டியலுக்கு அருகில் வடமேற்கு திசையில், தன் திருக்கரத்திலிருந்து பொற்காசுகளை பொழியும் வடிவில் நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீமகாலக்ஷ்மி தாயாரும் வீற்றுள்ளார்.

பகவானின் பெருமை மற்றும் வரலாற்றை உணர்த் தும் இக்கோயில் காலந்தோறும் பல மாற்றங்கள் அதுவும் சாஸ்திர மற்றும் ஆகம விதிமுறைபடி கண்டுள்ளது. புனிதமான இக்கோயிலும் அதன் இயற்கை கொஞ்சும் சுற்றுச்சூழலும் பக்தர்கள் ஆன்மீகப் பாதையில் லயிக்க ஏது வாக அமைகின்றது. எனவே, பக்தர்கள் அனைவரும் திரு மலைக் கோயிலில் குடிகொண்டிருக்கும் ஏழுமலை வாசனை தரிசித்து புண்ணியமடைவீர்களாக!

முற்றும்

# திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பக்தர்கள் செய்யக்கூடியன

- ✓ திருமலைக்கு வரும் முன்னர் உங்களுடைய இஷ்ட அல்லது குல தெய்வத்தை வழிபடுங்கள்.
- ✓ கோயிலுக்குள் அமைதியைக் காத்து உங்களுக்குள்ளேயே 'ஓம் ஸ்ரீவேங்கடேசாய நம:' என்று மனனம் செய்யுங்கள்.
- ✓ கோயிலுக்குள் உள்ளபொழுது ஏழுமலையானை தியானியுங்கள்.
- ✓ திருமலையில் பாபவிநாசனம் மற்றும் ஆகாச கங்கை போன்ற அரிய தீர்த்தங்களை பார்த்து மகிழவும்.
- ✓ திருமலையில் இருக்கும்வரை பழைய சம்பிரதாயங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் மதிப்பளியுங்கள். உடன் வரும் யாத்திரிகர்களிடையே சமய உணர்வுகளை மேம்படுத்துங்கள்.
- ✓ உங்கள் காணிக்கைகளை உண்டியில் மட்டுமே செலுத்துங்கள்.
- ✓ திருமலையைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுங்கள்.
- ✓ திருமலையானை தரிசனம் செய்யும்பொழுது பாரம்பரிய ஆடைகளையே அணியுங்கள்.
- ✓ கொரோனா தொற்று பரவலை தடுக்கும் விதமாக தவறாமல் முககவசத்தினை பயன்படுத்தவும். சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவும்.

## திருமலையில் பக்தர்கள் செய்யக்கூடாதன

- ✗ உங்களுடன் அதிகமான நகைகளையோ, பணத்தையோ எடுத்து வரவேண்டாம்.
- ✗ ஏழுமலையானைத் தரிசிப்பதற்குத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் திருமலைக்கு வராதீர்கள்.
- ✗ தரிசனத்திற்காக அவசரப்படாதீர்கள். வாய்ப்பு வரும்வரை க்யூவில் நின்று செல்லுங்கள்.
- ✗ சம்பிரதாயங்கள் அனுமதிக்காத பட்சத்தில் கோயிலுக்குள் வராதீர்கள்.
- ✗ திருமலையில் எல்லா மலர்களும் இறைவனுக்கே உரியன. ஆகையால் மலர்களை சூடாதீர்கள்.
- ✗ தண்ணீரையும், மின்சாரத்தையும் வீணாக்காதீர்கள்.
- ✗ புதியோரை தங்கும் அறையில் அனுமதிக்காதீர்கள். புதியோரிடம் அறை சாவிகளை ஒப்படைக்காதீர்கள்.
- ✗ எம்பெருமான் தரிசனம் மற்றும் தங்குவசதிக்காக தளாலிகளை அணுகாதீர்கள்.
- ✗ தெருவில் விற்கும் போலி பிரசாதங்களை வாங்காதீர்கள்.
- ✗ கோயில் வளாகத்திற்குள் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களைச் செய்யாதீர்கள்.
- ✗ நான்கு மாடவீதிகளிலும் காலணிகளைப் பயன்படுத்தாதீர்கள்.
- ✗ கோயிலுக்குள் அலைபேசி, புகைப்படக்கருவி முதலான மின்னணுக்கருவிகளை, ஆயுதங் களைக் கொண்டு வர வேண்டாம்.
- ✗ பல்வேறு வகையான அரசியல் கூட்டங்கள், சுவரொட்டிகள், போராட்டங்கள், உண்ணா விரதங் கள், சாலை மறியல், கடையடைப்புகள் முதலானவைகள் திருமலையில் செய்தல் கூடாது.

– செயலாட்சித் தலைவர்

# திருப்பாவையில் நப்பின்னை

ஸ்ரீ மந்நாராயணனுடைய தேவியர் திருமகள், மண்மகள், நப்பின்னை ஆகிய மூவராம். இம்மூவருள் நப்பின்னை என்பவர் ***''ஆயர் மடமகள் பின்னை''*** – என்று பெரியாழ்வாரால் புகழப்படுபவள். யசோதைப் பிராட்டியின் சகோதரரான கும்பர் என்பவரின் மகள் இவள் என்பர் பிள்ளை லோகம் ஜீயர். நீளை, பிஞ்ஞை, உபகேசி, பின்னை என்னும் திருப்பெயர்களும் இவளுக்கு உண்டு. ***''உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான்''*** – திருவள்ளுவமாலை, எருதினை அடக்குபவனை ஆயர்குலப்பெண் மணப்பது வழக்கம்.

***''இமிலேற்று வன் கூன் கோட்டிடை***
***ஆடினை கூடத்து ஆயர் தம் கொம்பிணுக்கே''*** – திருவிருத்தம்.



கிருஷ்ணாவதாரத்தில், ***''ஆயனாகி ஆயர் மங்கை வேய தோள் விரும்பினாய்''*** – என்றார் திருமழிசை ஆழ்வார். ஆயர்பாடியில் தாதெரு மன்றத்தில் யசோதையும் பிறரும் காண, கண்ணபிரானும் பலராமனும் நப்பின்னையை நடுவில் நிறுத்தி, குரவைக் கூத்தாடினர்.



அர்ச்சாவதாரங்களில், கண்ணபிரானுக்கு உருக்குமிணிப்பிராட்டியே முக்கிய தேவியாகத் திவ்விய தேசங்களில் சேவை சாதித்தாலும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் உருக்குமிணி 3, 4 இடங்களில் மட்டுமே குறிப்பிடப்படுகிறார். நப்பின்னையைப் பற்றியே பல நூறு இடங்களில் உள்ளது. ஆனால் ஸ்ரீபாகவதம், ஸ்ரீவிஷ்ணு புராணம் முதலிய நூல்களில் பின்னையைப் பற்றிய குறிப்பு இல்லை. வட நாட்டில் இராதையைப் போற்றுவர். சுவாமி தேசிகனுடைய யாதவாப் யுதயத்தில் பின்னை குறிப்பிடப் பெறுகிறாள்.







**முனைவர்**
**இரா.வ. கமலக்கண்ணன்,**
**காஞ்சிபுரம், 99763 66781**

பட்டர் அருளிய *"நீளா துங்க ஸ்தந கிரி"* என்னும் திருப்பாவைத் தனியனில் பின்னையை – நீளா – என்று கூறியிருப்பதால் இதுவே இவளுடைய வட மொழித் திருநாமம் என அறியமுடிகிறது.

இவளை மணப்பதற்காக இவள் தந்தை கன்யா சுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அசுரத் தன்மை பெற்ற ஏழு எருதுக ளையும் கண்ணபிரான் 7 திருவுருக் கொண்டு வலியடக்கித் தழுவினன் என்று புராணம் கூறும்.


இனி, திருப்பாவையில் நப்பின்னை பற்றி வந்துள்ள செய்திகளைக் காண்போம். பாசுரம் 18.

*"உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்,*
*நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்*
*கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்....*
*பந்தார் விரலி! உன்மைத்துனன் பேர்பாட*
*செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப*
*வந்து திறவாய்"*

"ஸ்ரீ நந்த கோபரது மருமகளே! மணம் வீசும் கூந்தலை உடையவளே! கதவைத் திற. பொழுது விடிந்தது. கண்ணபிரானோடு விளையாட உரிய பந்தை உன் கைவிரல்களில் உடையவளே! உன் கணவன் புகழைப்பாட, வளைகுலுங்க தாமரை போன்ற கைகளால் கதவைத் திறப்பாயாக".

பெருமானைப் பற்ற பிராட்டி தகவுரை குதவை (புருஷகாரம்) கிருஷ்ணாவதாரத்தில் இவள் பட்டத்தரசி ஆதலின் இவளைப் பற்றுகின்றனர். கண்ணபிரானும் பின்னையும் பந்தாடியபோது பெருமாள் தோற்க, இவள் வெல்ல, தனக்கு வெற்றியைத் தந்த அப்பந்தைக் கையால் அணைத்துக் கொண்டே உறங்குகிறாள். அதை கண்ட ஆய்ப்பெண்கள், "வளைகள் ஒலிக்க, அதுகேட்டு நாங்கள் மகிழக் கதவை வந்து திறவாய்" – என்றனர்.

"கந்தம் கமழ" என்றதால் மூக்கும், "பேர்பாட" என்றதால் நாவும், "வளை ஒலிப்ப" என்றதால் செவியும், "வந்து திறவாய்" – என்றதால் கண்ணும் தமக்குரிய புலனை அனுபவிக்கச் செய்– என்று வேண்டியவாறாம். 4 பொறிகளைக் கூறியது மெய்க்கும் இனங்குறித்தலாம். (செந்தாமரைக்கை – ஞானம்) "ஞானக்கை தா" என்றார் நம்மாழ்வார் (திருவாய் 2–9–2). இது உடையவர் உகந்த பாசுரம்.



பாசுரம் 19

*"குத்துவிளக்கெரிய.....*
*...கொத்தலர் பூங்குழல்*
*நப்பின்னை கொங்கைமேல்*
*வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய் திறவாய்*
*மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை*
*எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்*
*எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்*
*தத்துவம் அன்று தகவேலோரெம்பாவாய்"*

"கொத்தலர் பூங்குழல் நப்பின்னை" –இதனால் அவளுடைய கூந்தலின் சிறப்பு கூறப்பட்டது. *"மலர்மார்பா வாய் திறவாய்."* நீ உன் மார்பைப் பின்னைக்குத் தந்தாலும், வாயையாகிலும் எமக்குத் தரலாகாதோ?" என்று இரக்கின்றனர். அது கேட்ட பெருமான் கதவைத் திறக்கப்புக, நப்பின்னை தடுக்க, அது கண்ட ஆய்ச்சியர், "அடியார் காரியத்தை முடிக்கவுள்ள நீயும் இங்ஙனம் செய்வது தகுதி அன்று" என்றனர். தத்துவம் அன்று தகவு அன்று – தகவுரை கூறவேண்டிய உன் இயல்புக்குக் கண்ணனை எழுப்பாமல் இருக்கிற இது தகுதியன்று. உன் கருணைக் குணத்துக்கும் தகுதியன்று. பஞ்ச சயனம் – அர்த்தபஞ்சகம். அவை: இறை நிலை, உயிர்நிலை, தக்க நெறி, ஊழ்வினை, வாழ்வினை என்பன. பாசுரம் 20......

*"நப்பின்னை நங்காய்! திருவே! துயில்எழாய்*
*உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை*
*இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்."*

"திருவே துயில் எழாய்" – எங்களுக்காக இப்போது துயில் எழுவாயாக. அது கேட்ட பின்னை– "பெண்களே! நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது என்ன!" என, நோன்புக்கு வேண்டிய விசிறி, கண்ணாடி முதலிய உபகரணங்களைத் தந்து, உன் மணாளனையும், எம்மையும் நீராட்டுவிக்கவேணும் என வேண்டினர். உள்ளுறையில், எங்களுடைய அகப்புறப்பற்றுகளை நீக்கி, சொரூப ஞானத்தையும் தந்து, உனக்கு அடங்கிய பெருமானை எங்களோடு சேர்ப்பிக்க வேண்டும் – என்னும் கருத்து உள்ளது.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 52

## (பகவத் கீதை சிறப்பு புதிர்)

**இடமிருந்து வலம்**

01. ஸ்ரீமந்நாராயணனுக்கு சயன சாதனமாக விளங்குபவர்....(5)
02. பாண்டவர்களில் வில்லாளி ...(5) நானே.
05. வானிலிருந்து வருகின்ற ..(2) நானே.
14. வார்த்தை இல்லாத மொழி...(3)
17. பிரகஸ்பதி தேவர்களின் ....(2)
22. மகாலட்சுமியின் தந்தை.....(3)
24. தோல்வி இல்லாதது....(3)
25. கிரியை ....(3) நானே.
31. உலகிற்கே ஒளி தருகின்ற கிரகம்...(4) நானே.
33. இருளைப் போக்கி வெளிச்சம் தரும்....(2) நானே.

**வலமிருந்து இடம்**

2. மனிதர்களின் ....(4) நானே.
7. மீன் இனங்களில் உயர்ந்தது...(4)
9. பித்ருக்களில் சிறந்தவன்....(4)
20. நானே தொடக்கம் முதல்....(2)
26. விலங்குகளின் அரசன்....(4)
29. வேதங்களை வடிவமைத்த மகாமுனிவர்...(4)
30. தண்டித்து அடக்குகின்ற தர்மராஜன்...(3)
32. உயிர்களுக்கு உடல் அளிப்பது ....(2)
35. ஆயுதம் தரித்த அவதாரப் புருஷன்...(3)
37. மழையின் அதிபதி. தேவர்களின் அரசன்....(5)

**மேலிருந்து கீழ்**

1. புனிதமான "ராஜதரு" ....(6) நானே.
2. எழுத்துக்களில் இருப்பது....(4)
3. திருமணச் சடங்குகள் விவரிக்கப்பட்டுள்ள வேதம்...(2)
4. ரம்யமான இளவேனிற்காலம்....(6)
6. புராணம் கூறும் வாகனப் பறவை....(4).
8. வேள்வி.....(4)
11. தெளிந்த அறிவு (இறுதி எழுத்து இல்லை)....(2)
13. தெய்வீகப் பசு....(4)
15. வேதங்களில் பிறந்தது, ஜெபிப்பது....(5)
16. தர்மசீலர்கள் கடைபிடிப்பது ....(2)
18. இலட்சியத்தை அடைந்திட ....(4) வேண்டும்.
20. ஜீவனின் சூத்திரக்கலை....(6)
27. ....(2) வேதம் இசை வடிவமானது.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 2 | | | | |
| | 3 | | | | 4 | | | ■ | 5 | | |
| | | | | | | | | | | 6 | 7 |
| | | 8 | | 9 | | 10 | | 11 | ■ | | |
| | | | 12 | | | 13 | 14 | | | | 15 |
| | | | 16 | 17 | | | | 18 | | | |
| | 19 | | | 20 | | | | | 21 | ■ | |
| | 22 | | | | 23 | | 24 | | | ■ | |
| | ■ | ■ | 25 | | | | | 26 | 27 | ■ | |
| 28 | | | | 29 | ■ | ■ | ■ | | | 30 | |
| 31 | | | | | | 32 | 33 | | ■ | ■ | 34 |
| ■ | | | 35 | | 36 | | | | | 37 | ■ |

தொகுப்பு :
**பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 4480**

புதிருக்கு விடை அறிய 71ம் பக்கம் பார்க்கவும்...

**கீழிருந்து மேல்**

08. ....(3)வேதத்தில் சிவனைப் பற்றிய ஸ்ரீருத்ரம் உள்ளது.
09. எட்டு வசுக்களில் பரமாத்மாவின் இருப்பு..... (3)
10. சகல படைப்புக்களின் பிதா....(3)
12. பனிபொழியும் மாதத்தில் பகவான்.....(4)
15. காமன், ரதியின் துணைவன்....(5)
19. நதிகளிலே பகவான்...(4) பாகீரதியாம்.
20. யாகத்தில் சேர்க்கும் ஸ்வதா....(3)
21. இந்திரியங்களில் நினைப்பது....(3).
23. சூதாட்டங்களில் நினைப்பது.....(3).
24. மழைக்கு மாறானது....(3)
28. ஓம்....(5)
34. கணக்கிடுகின்ற நேரம்....(3)
36. யாகத்தீயை வளர்க்க உதவுகின்ற திரவம்...(2)



# ஸ்வாமி புஷ்கரணி
## (திருமலையப்பன் திருக்குளம்)


- திரு. டி.டி. வரதராஜன்,
சென்னை, 9791998950.


ஸப்தகிரியில் நின்று பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் ஸ்ரீநிவாஸப் பெருமாளின் திருத்தலமாகத் திகழும் திருமலை எத்தனையோ எண்ணிலடங்காத மகிமைகளைத் தன்னுள் கொண்டு விளங்கினாலும் அவைகளுள் மிகவும் முக்கியமானவை மூன்று எனச் சான்றோர் பகர்வர். அவை க்ஷேத்ர, தீர்த்த, விமான மகிமை என்பனவாம்.

இம்மூன்றின் பெருமைகளையும் ஒரு சேர எடுத்து ரைக்கும் சுலோகம் ஒன்று இராமாநுஜருடைய அவதார உத்ஸவ காலத்தில் சேவிக்கப்படுவதை உதாரணமாகக் கொள்ளலாம். நான்கு திக்குகள் மங்களாசாஸன நிகழ்ச்சியின் போது திருவேங்கடமுடையான் திசையான வடதிசை நோக்கி எம்பெருமானார் கைதொழுது சேவித்து எம்பெருமானை வரவேற்பதாகும் அது.

*“ஆதி வராஹ க்ஷேத்ரே...!*
*ஸ்வாமி புஷ்கரிணீ தீரே...!*
*ஆனந்த நிலைய விமானே...!*
*ஸ்ரீஅலர்மேல்மங்கா சமேத ஸ்ரீஸ்ரீநிவாச ஸ்வாமின:*
*ஜய விஜயீபவ, விஜயீபவ விஜயீபவ!”*

இனி இம்மூன்றினுள்ளும், ஸ்வாமி புஷ்கரணியின் தனிப் பெருமைகளை ஈண்டு மிகச் சுருக்கமாக அநுபவிப்போம்.

### ஸ்வாமி புஷ்கரணியின் தனிப் பெருமைகள் :

ஸ்ரீவைகுண்ட நாதன் வீற்றிருக்கும் பரமபதத்தில், அவனது திருவடிக் கமலங்களைத் தொட்டுக் கொண்டு ஓடும் விரஜா நதியின் ஒரு கூறினை திருமலையில் கொண்டு வந்து சேர்த்தார் கருடாழ்வார். அன்றிலிருந்து “ஸ்வாமி புஷ்கரிணி” என்றே இத்தீர்த்தம் அழைக்கப் படலாயிற்று. “கோனேரி” என்றும் இதனை அழைப்பர். கோன் என்றால் தலைவன்–ஸ்வாமி. ஏரி–மஹா புஷ்கரிணி. ஸ்ரீவேங்கடேஸ ஸஹஸ்ர நாமத்தில், *“ஸ்வாமி தீர்த்த நிவாஸாய நம”* என்ற நாமாவளியினால்

புகழப்படுகிறது. ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்தத்தை "பூலோக கல்ப தரு" என்று கூட முன்னோர்கள் அழைப்பதுண்டு. முப்பத்து முக்கோடி விண்ணுலக தேவர்களும் திருமலைக்கு வந்து ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடுவதை பெரும் பாக்கியமாகக் கருதுவர்.

இந்தத் தீர்த்தத்தில் நீராடிப் பெருமாளைத் தரிசனம் செய்யும் பக்தர்களின் சகல பாபங்களும் நீங்கப் பெற்று சகலவித ஐச்வர்யங்களையும் பெறுவர் என புராணங்கள் கூறுகின்றன. சப்த ரிஷிகளான அத்ரி, ப்ருகு, குத்ஸ, வசிஷ்ட, கௌதம, காச்யப, அங்கீரஸர் இப்புஷ்கரிணியில் முறையாக தீர்த்தமாடிய பிறகே, வேங்கடவனை தரிசிக்கச் செல்வர்.

முந்நூற்று அறுபது தீர்த்தங்கள் ஸ்வாமி புஷ்கரிணியில் சங்கமிக்கின்றன. கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய திரிவேணி சங்கம நதிகளில் சரஸ்வதி நதிக்கு இங்கு ஓர் ஏற்றத்தைக் கொடுத்திருக்கிறார் வேங்கடேச பகவான். ஆம், ஸ்வாமி புஷ்கரிணியை சரஸ்வதி என்ற பெயரிலும் அழைக்கலாம் என்பது தான் அது.

சாளுவ நரசிம்ம ராயலு அரசர் காலத்தில் ஸ்வாமி புஷ்கரிணி மேம்படுத்தப்பட்டு மிக்க பயனுள்ள வகையில் அமைந்திருந்தது. இந்த நூற்றாண்டில் இப்பணிகள் மேலும் சிறப்பாக திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் மேற்கொள்ளப்பட்டு நூதன வசதிகளுடன் திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

வேங்கடவன் திருக்கோயிலுக்கு வடகிழக்கில் உள்ள தீர்த்த பகுதி தான் "ஸ்வாமி புஷ்கரிணி" எனவும், ஆதி வராஹ ஸ்வாமி கோயில் எதிரில் உள்ள தீர்த்தப்





பகுதி "வராஹ புஷ்கரிணி" எனவும் அழைக்கப்படுகிறது என்பதை அநேகம் பேர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஸ்வாமி புஷ்கரிணியின் நடுவில் அழகியதோர் நீராழி மண்டபம் அமைந்துள்ளது கண் கொள்ளாக் காட்சியாகும். தெப்போத்ஸவ காலங்களில் உற்சவ மூர்த்தி இம்மண்டபத்தில் எழுந்தருளச் செய்வதைக் காணக் கண்கோடி வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதத்தில் இத் தீர்த்தத்திற்கு புஷ்கரணி முக்கோட்டி நடைபெறும். அதுமட்டுமின்றி தினமும் மாலை வேளையில் புஷ்கரணிக்கு ஆரத்தி காட்டுவதும் குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

குலசேகர ஆழ்வார் திருமலையில் இச்சுனையில் ஒரு குருகாகவாவது (நாரை) பிறக்க ஆசைப்படுகிறார்.

சாஸ்திர விதிப்படியும், பகவானின் கூற்றுப்படியும், பெருமாளை தரிசிக்க திருமலைக்கு வரும் பக்தர்கள் முதலில் ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, பிறகு நேரே ஆதி வராஹப் பெருமாளை தரிசனம் செய்து கொண்ட பிறகு தான் ஏழுமலையான் சந்நிதிக்குள் பிரவேசிக்க வேண்டும். தற்காலத்தில் இம்முறையைப் பின்பற்றுபவர்கள் மிகக் குறைவே. இனி வருங்காலத்தில் வருபவர்களாவது இதை அநுசரித்தால் நல்லது.

இங்கு ஸ்வாமி புஷ்கரிணி பற்றிச் சொல்வது சாற்பமே. சொல்லாமல் விட்டது ஏராளம் எனச் சொல்லி நிறைவு செய்யலாம்.

# ஆயுர்வேதமும் ஆன்மீகமும்



ஈடு இணையில்லா பாரதத் திருநாட்டில், இரண்டு மொழிகள் தெய்வீகமான தாகவும், சிறப்பானதாகவும் கூறப்பட்டுள்ளது. ஒன்று சமஸ் கிருதம், மற்றொன்று தமிழ். எத் தனை, எத்தனை பெருமை நிறைந்த புத்தகங்கள் சமஸ்கிருதத்தில் உள் ளதோ, அத்தனை, அத்தனை பெருமை நிறைந்த புத்தகங்கள் தமிழிலும் உள்ளது. இவ் விரண்டு மொழிகளும் இறைவனால் பேசப்பட்டதும், இறைவனின் அம்சங்களான பன்னிரு ஆழ்வார்களால் பேசப்பட்டதும் ஆகும். நம்மாழ்வார் நான்கு வேதங்க ளின் கருத்துக்களை தமது திருவாய்மொழியில் சொல் லியிருக்கிறார். அதன் காரணமாய் அவருக்கு ***"வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்"*** என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

நம்மாழ்வாரையே முன்னோடியாகக் கொண்டு, நாமும் ஆயுர்வேதத்தின் கருத்துக்களை தெய்வீக மொழியான தமிழில் விளக்கங்களைக் காணலாம்.

### ஆயுர்வேதம் :

ஆயு : + வேதம் – ஆயுளை நீடிப்பதைப் பற்றிய அறிவு (வேதம் என்றால் அறிவு, ஞானம்). ஆயுர்வேதம் நமக்கு மூலிகைகளையும், வியாதிகளையும், அதன் குணங்களையும், குணப்படுத்தும் முறையையும் மட்டு மல்லாமல் வாழ்வியல் நெறிமுறைகளையும் கற்றுத் தந்துள்ளது.

*ஆயு: காமயமானேன தர்மார்த்த சுக ஸாதனம் !*
*ஆயுர்வேதோபதேஷேசு விதேய: பரமாதர: !!*

–வாக்பட்டர்

தர்ம, அர்த்த மற்றும் சுகம் இம்மூன்றும் புருஷார்த் தங்கள். இங்கே சுகம் என்று சொல்லப்படுவது காம மும், மோக்ஷமும் ஆகும். புருஷார்த்தம் என்பது மனித வாழ்க்கையின் லக்ஷயம். இந்த லக்ஷயத்தை அடைவ தற்கு தீர்காயுளும் ஆரோக் கியமும் அவசியம். ஆயுர் வேதம் மனிதன் தீர்காயுளு டன், ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மோக்ஷப் ப்ராப்தியை அடைவதற்கு உண்டான வழியை காட்டுகிறது.

### ஆன்மீகம் :

"ஆ" என்றால் ஆன்மாவை குறிக்கும். ஆன் மாவைப் பற்றிய மேன்மையான அறிவைப் பற்றி பேசு வது "ஆன்மீகம்" ஆகும். ஒவ்வொரு உயிரிலும் ஆன்மா உண்டு. அது மரமாகட்டும், பறவையாகட்டும், மனித னாகட்டும், அந்த ஆன்மாவை உணர்ந்து நம்மை மீண் டும் பிறப்பில் இருந்து காக்கும் அறிவே ஆன்மீக அறிவு. இந்த ஆன்மீக அறிவு நமது தேசம் முழுவதும் பரவிக் கிடக்கும். மண்ணிலும், மலையிலும், மரத்திலும், நதியி லும், கோயில்களிலும் காணமுடியும். இந்தக் கருத்தை யோகிகளும், ஞானிகளும் வேண்டுமானால் அறிந்தி ருப்பர், எளியவர்களாகிய நாம் இதை அறிவதற்கே ஆன்மீகத்தோடு பிணைந்த நமது கலாச்சாரமும் பண்பாடும் விளங்குகிறது.

ஆன்மாவை அறிவதற்கு இறையுணர்வு, பக்தி தேவை. பக்தி ஆசார, அனுஷ்டானங்களின் வாயிலாக உயர்வடைகிறது. இந்த ஆசார, அனுஷ்டானங்கள் உட லுக்கு அளிக்கப்படும் சிகிச்சைப் போன்றது. உடலின் அமைப்பின்றி ஒரு ஆன்மா எப்படி தனது கர்மங்களை களைய முடியும். உடல் ஒரு கருவியாக இருக்கிறது. அதனால் தானே

– டாக்டர் ஜெ.நிகிலா வெங்கட்,
சிறுமுகை,
89409 91234.

*"உடம்பை முன்னம் இழுக்கென்று இருந்தேன்*
*உடம்பினுக் குள்ளே உறுப்பொருள் கண்டேன்*
*உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டான்*
*என்று*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"*

–திருமூலர்.

உடம்பினுள் உறையும் இறைவனுக்காக உடம்பை வளர்த்தேன் என்கிறார். இந்த உடம்பை துறந்து பக்தி செய்வது அறிது. "சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்" என்னும் முன்னோர் சொல்லும் அதனையே உணர்த்துகிறது. இது வெறும் வாக்கியம் அன்று, வாழ்ந்தவர்களின் அனுபவ வாக்கு.

*"லக்ஷணம் மனசோ ஞானஸ்யபாவோ பாவ ஏவ ச*
*ஸதி ஹி ஆத்மேந்தியார்த்தானாம் ஸன்னிகர்ஷே ந*
*வர்த்ததே*
*வைவிருத்யான் மனசோ ஞானம் சான்னித்யாத்*
*தச்ச வர்த்ததே"*


–சரகஸம்ஹிதா

உடல் ஆரோக்கியமாக இருக்கும் போது, மனம் திடமாக இருக்கும். மனம் ஆத்மாவோடே சம்பந்தப் பட்டது–ஆன்மா (ஆத்மா) மோக்ஷத் தையே விரும்பும்–இதற்கு வழி காட்டுவதே "ஆயுர்வேதமும்–ஆன் மீகமும்".

ஆன்மீகம் என்றாலே பக்தி (வழி பாடு). இறைவனை வழிபடும் முறையே பக்தியாகும். உடம்பை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள பக்தியை ஊன்று கோளாகவும் பிடித்துள்ளார்கள். உடல் ஆரோக்கியமாக இருந்தால் தானே ஆன்ம சிந்தனை, தர்ம சிந்தனை அனைத்தும் செயல்படுத்த முடியும்.

## ஆயுர்வேதத்தின் கடவுள் "ஸ்ரீ தன்வந்தரி"

பாற்கடல் கடைந்து அமுதத்தை பெற்ற பொழுது ஐராவதம், அஸ்வம், கற்பக விருக்ஷம், மஹாலக்ஷ்மி தாயார் மற்றும் இறுதியாக தன் வந்தரி பகவான் அம்ருத கலசத்தோடும், அட்டை பூச்சியையும் இருகரங்களில் தாங்கி, மற்ற இரு கரங்களில் சங்கு, சக்ரம் தாங்கி தோன்றினார் என்கிறது புராணங்கள். தன்வந்தரி பகவான் சாக்ஷாத் விஷ்ணுவின் அம்சமாக அவதரித்தவர் என்றே பாகவதமும், இராமாய ணமும் பறைசாற்றுகின்றன.



பாகவதத்தில்,

*"அம்ருதா பூர்ணகலசம் விப்ரதுவலய பூஷித:*
*ஸவை பகவத: சாக்ஷாத் விஷ்ணோரம்சாம்ச*
*சம்பவ:*
*தன்வந்திரி ரிதிக்யாத ஆயுர்வேத திருதிஜ்யபாக்"*

– பாகவதம் 8.8.24

அதேபோல இராமாயணத்தில்,

*"தன்வந்திரிர் மகாதேஜா லோக ரக்ஷண தத்பர:*
*ஆயுர்வேத மயோராம ததா சாதாரண ஸ்ம்ருத:"*

என்றும் தன்வந்தரியின் அவதார மகிமை கூறப் படுகிறது. தன்வந்திரி அவதாரத்தை திருமாலின் அம்சா வதாரமாக ஏற்று நாராயணீயத்தில் பட்டர்,

*"தருணாம் புதஸுந்தரஸ் ததாத்வம்*
*நநு தன்வந்தரீ ருத்திதோம்புராசே: |*
*அம்ருத கலசே வஹன் கராப்யாம்*
*அகிலார்த்திம் ஹர மாருதாலயே ச ||"*


– நாராயணீயம் 28–10

இப்பொழுது நமக்குத் தெளிவு கிடைத்து விட்டதல்லவா? ஸ்ரீதன்வந்தரி பகவான் விஷ்ணுவின் அவதாரம் என்று பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திரு மழிசை பிரான் தனது நான்முகன் திருவந் தாதியில்,

*"நான்முகனை நாராயணன்*
*படைத்தான் நான் முகனும்*
*தான் முகமாய்ச் சங்கரனைத் தான்*
*படைத்தான்*
*யான் முகமாய் அந்தாதி மேலிட்டு*
*அறிவித்தேனாழ் பொருளை*
*சிந்தாமல் கொண்மினீர் சேர்ந்து."*

என்ற பாசுரத்தின் படி நான்முகனான பிரம் மாவைப் படைத்தவர் மஹா விஷ்ணு ஆவார். அவர் பிரம்மாவிற்கு உபதேசித்த பின்னரே இந்த ஆயுர்வேத பரம்பரை தோன்றியுள்ளது. மஹா

**பிரம்ம முகூர்த்தம் :**



**இரவின் கடைசி மூன்று மணிநேரம் தான் பிரம்ம முகூர்த்தம் எனப்படும். அதாவது அதிகாலை 3.00 மணிமுதல் 6.00 மணி வரை தான் அந்த உன்னதமான காலைப் பொழுது.**

**(1) ப்ராண வாயு நிறைந்து இருக்கும் அதிகாலைப் பொழுதில் எழுந்திருப்பதால், நமது நுரையீரலும் நல்ல ப்ராண சக்தியைப் பெற்று இரத்த ஓட்டம் சீரடைகிறது, இரத்தத்தில் நல்ல ப்ராண சக்தி ஏற்படும்போது, நம்மையறியாமல் நாம் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு வழிசெய்கிறது.**

**(2) அதிகாலை எழுந்து கதவு, ஜன்னல்கள் திறந்து வைப்பதால், ப்ராண சக்தி மட்டும் அல்ல** Bio-Magnetic energy**யும் வீட்டிற்கு வருகிறது. இவை உள்ளே வருதற்கு ஏதுவாகத்தான் நம் முன்னோர் வடகிழக்கு மூலையில் ப்ரதான வாயிலை வைத்திருந்தனர். நமது பூமியின் அமைப்பைப் பொருத்தே, இந்த வடகிழக்கை முதன்மைப்படுத்தி, மற்ற திசை வாயில்களுக்கு இரண்டாமிடம் கொடுத்தனர்.**

**(3) உள்ளே வந்த சக்திகள், எங்கு சேகரிக்கப்படுகிறது என்பதையும் கவனிப்போம்.**

**அ) தண்ணீர் சேகரிக்கும் தாமிரப்பாத்திரங்கள். இன்றைய காலத்தில் முழுமையாக சில்வர் பாத்திரங்களுக்கு மாறிவிட்டோம். ஆனால் முன்னோர்கள் என்றுமே முறைதவற மாட்டார்கள்.**

**ஆ) நிலத்தில் வரையப்பட்டிருக்கும் காவிவர்ண கோடுகள், அந்தக் காலத்தில் வாசலில் காவி வர்ணம் மற்றும் பச்சரிசியில் கோலம் போடுவார்கள். வீட்டிற்குள்ளும் காவி பூசப்பட்டிருக்கும். இக்காலத்தில் முழுமையாக** Tiles **போடப்பட்டிருப்பதால், காவி துறவு பூண்டுவிட்டது.**

**காவி வர்ணத்திற்கு இத்தகு உயர்ந்த தன்மை இருப்பதால் தான் கோயில் சுவர்களில் வெள்ளைக்கு அருகில் காவி வர்ணம் பூசப்பட்டிருக்கும். வீடுகளில் பெறமுடியாத நல்ல சக்திகளை ஒரு சேர வைத்திருக்கும் ஒரு பொக்கிஷக் கிடங்கு "ஆலயம்" ஆகும். இதனையே ஔவை மூதாட்டியும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஆலய வழிப்பாட்டின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுள்ளார்.**

விஷ்ணுவே, ஸ்ரீதன்வந்தரியாக வந்து மக்களுக்கு மருந்தோடு அருளும் கொடுத்து வியாதியினை குணப்படுத்தி நல்வழிப்படுத்துகிறார்.

ஆயுர்வேதத்தில் தினச்சர்யா, ருதுசர்யா என்றெல்லாம் விளக்கியுள்ளார்கள். தினச்சர்யா என்றால் அனுதினம் செய்ய வேண்டிய கிரியைகள் என்ன? அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கிறது.

ஒவ்வொருவருக்கும் காலை கண் விழிப்பதிலிருந்துதான் அன்றைய தினம் துவங்குகிறது. காலை என்றால் இக்காலத்தில் 7.00 மணி வரை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் ஆயுர்வேதமோ, இரவின் கடைசி மூன்று மணி நேரத்தை பிரம்ம முகூர்த்தமாகக் கூறுகின்றது.

*''ப்ரஹ்மே முகூர்த்தே உத்திஷ்டேஜ்ஜீர்ணாஜீர்ண நிரூபயன் ரக்ஷார்த்தம் ஆயுஷ: ஸ்வஸ்தோ ஜாதவேங:*
*ஸமுத்ஸ்ருஜேத்''*

ஆரோக்யமான மனிதன், அவனது ஆரோக்கியத்தை வாழ்நாள் முழுக்க தக்க வைப்பதற்கு, அவன் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்திருத்தல் அவசியம். அவன் அவ்வாறு எழுவதற்கு முன், முந்தைய இரவு உண்ட உணவு முழுமையாக ஜீரணிக்கப்பட்டு விட்டதா என்பதையும் அறிந்து செயல்பட வேண்டும்.

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

## ஸ்ரீ வியாசராயரின் ஸ்ரீநிவாசஸ்துதி

பாரத தேசத்தில் மத்வமதத்தில் எத்தனையோ ஞானியர்கள், பக்தர்கள் இருந்தாலும் புரந்தரதாசர் வியாசராயரையே துதித்தார். இவர் பக்தி, வைராக்கிய கீர்த்தனைகளை இயற்றினார். கீர்த்தனைகள் யாவும் ராக தாளங்களுடன் சங்கீதமாகவும், பஜனைகளாகவும் பாடக்கூடிய வகையில் இருந்தது. புரந்தரதாசர், கனக தாசருக்கு குருவாக இருந்தார். தர்கதாண்டம், நியாயாம் ருத சந்த்ரிகா ஆகிய நூல்களை இயற்றி சந்த்ரரிகா சார்யராக புகழ் பெற்றார்.

*''கிருஷ்ணானி பேகனே பாரோ'', ''ஜனும ஜனுமதலி கொடுகண்ட்யஹரியே'', ''அந்தரங்கதலி ஹரிய கொணதவ ஹுட்டுகுருடனே'', ''நம பார்வதீ பதினுதஜனபால''* ஆகிய கீர்த்தனைகளும் புகழ் வாய்ந்தவை.

குருவின் ஆணைபடி ஸ்ரீநிவாசரை சேவித்த மஹானு பாவர் வியாசராயர். இவர் ஸ்ரீநிவாசரை 3 சுலோகங்களால் துதித்துப் பாடினார்.

*''ப்ராத: ஸ்மராமிரமயா சஹ வேங்கடேஷம் !*
*...ப்ராத: காலே படேத்யஸ்து பாபேப்யோ முச்யதே நர: !!''*

என்பதாகும். வியாச ராயரின் பிருந்தாவனம் நவ பிருந் தாவனம் என்ற பெயரில் கருநாடக மாநிலத்தில் ஹம்பி யின் அருகே ஆனே குண்டி என்ற இடத்தில் உள்ளது.

## ஸ்ரீ வாதிராஜஸ்வாமியால் துதிக்கப்பட்ட திருவேங் கடவன் :

உடுப்பியின் அஷ்ட மடங்களில் ஒன்றான சோதே மடத்தின் பரம்பரையைச் சேர்ந்தவர். ஹயக்ரீவோ பாச குலுனு வாகீச தீர்த்தகரகமல சம்ஜாதுலுனு, வாகீச தீர்த்தகரகமல சம்ஜாதுலுனு, தீர்த்த ப்ரபந்தமு, ருக்மிணீ விஜயம், யுக்தி மல்லிகா ஆகிய நூல்களையும், கன்னடத் தில் லக்ஷ்மி சோபனம் என்ற திவ்ய ஸ்தோத்திரங் களையும் இயற்றினார். தம் 120 வருட கால வாழ்க்கை யில் பல முறை ஸ்ரீ கிருஷ்ணனை உடுப்பியில் வழிபட்டார். பஞ்ச பிருந்தாவனத்தின் நடுவே திகழ்கின்ற ஸ்ரீவாதிராஜர் உலகத்தில் மிகுந்த புகழ்பெற்றவர். இவர் தம் வாழ்வில் பல முறை திருமலைக்கு வந்து ஸ்ரீநிவாசரை தரிசித்து, அந்த ஸ்வாமிக்கு சாலகிராமத்தால் தயாரித்த மாலையை





சமர்ப்பித்தார். மேலும், தம் தீர்த்த பிரபந்தத்தில் திருப்பதியையும், திருவேங்கடவனையும் புகழ்ந்து பாடி பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

*"ஸ்ரீ வேங்கடாசலச் சைல வாசீதாசி*
*க்ருதாமரா: !*
*சாயயாபாதுமாம் நித்யம்*
*ஸ்ரீனிவாச சுரத்ரும: !!"*


ஒளிமயமான திருவேங்கடவனின் மலையில் ஸ்ரீநிவாசன் என்ற கல்ப விருக்ஷத்தின் நிழல் எப்பொழுதும் எம்மைக் காப்பாற்றும் என்று சகல தேவதைகளும் கூட ஸ்ரீநிவாசருக்கு தாசர்களாகினர்.

*"த்ருஷ்ட்வாதி சிதிசி ஸ்வீயான்*
*தயயா பாலயன்னிவ!*
*வர்ததே விஸ்வதச்சர்*
*வேங்கடே வேங்கடேஸ்வர: !! "*

இவ்வுலகத்தை காண்பதற்காகவே, சஹஸ்ரக்ஷகன் ஆன திருவேங்கடவன் உயர்ந்த மலையின் மேல் நின்று அனைத்து திசைகளிலுமுள்ள தன் பக்தர்களைக் கண்டு காப்பாற்றுகின்றார்.

*"யே சங்க சக்ரோஜ்ஜ்வல பாஹுயுக்மா:!....*
*...ஸ்புடீக ரோத்யாத்மகராம்பு ஜாதை:"*

சங்கு சக்கரத்தைத் தரித்து ஒரு கரத்தால் தன் பாதங்களை காண்பித்து யார் என்னுடைய திருவடிகளை பூஜிக்கின்றனரோ அவர்களை இந்த வாழ்க்கைக் கடலிலிருந்து தாண்டிவிடச் (கடக்கச்) செய்வேன் என்றும், மற்றொரு கரத்தினை இடுப்பின் அருகே வைத்துக் கொண்டு பக்தர்களை பாவ சாகரத்திலிருந்து தாண்டி விடச் செய்வதாகக் கூறுகிறார்.





*"ப்ராயோந்யத்ர கதாம் ஸ்ரியம்*
*நிஜவசாங்கர்த்யம் முஹு: காங்க்ஷீதம் !*
*தேஷாம் வேஸ்மசு*
*விஸ்மிதோனிவசதி*
*ஸ்ரீவேங்கடேசோனிசம் !!"*

தேவதைகளின் பிரியன் ஆன ஸ்ரீநிவாசர், பக்தர்களின் காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு அகண்ட ஐச்வர்யத்தை வழங்குகிறான்.

*"ஆரூட கருடஸ்கந்த*
*மாலிங்கித ரமாதரம் !*
*ஆநமஜ்ஜன சர்வஸ்வ*
*மாஸ்ரயே வேங்கடேஸ்வரம்!!"*

கருடனின் முதுகின் மேல் எழுந்தருளிய வேங்கடவன் ரமாலிங்கிதன் ஆகியுள்ளார். அனைத்து மக்களுக்கும் சர்வமும் ஆகி அருளைத் தருகின்றார்.

*"கசி போக்ருத்யயம் சேதேகி*
*க்ருத்யாதிஷ்டதி!*
*அபதீர்ண்யோனு ஜீக்ருத்ய*
*சதத்பக்தாக்ரீணீ; பணீ !!"*

சேஷனின் மேல் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீநிவாசர் இப்பொழுது சேஷ பர்வதத்தின் மேல் நின்றுள்ளார். இராமாவதாரத்தில் லட்சுமணனான சேஷனின் சேவையை ஏற்றுக்கொண்டார். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் சேஷனான பலராமனின் கௌரவத்திற்கு உரியவரானார். ஆகையால் ஸ்ரீநிவாசனின் பக்தர்களுள் சேஷனும் ஒருவராவார்.

சிவன், சூரியன், சந்திரன் ஆகியோர் ஸ்ரீநிவாசனின் ஜோதியாக உள்ளனர். புண்டரீகாக்ஷனான இவர் அனைத்து பொருட்களையும் விட, சகல செல்வங்களையும் விட மிக மிக உயர்ந்தவர். *"ஸ்ரீவேங்கடகிரித்ரோணி கேஷாணீயச்யானணீயசீ தம் வரண்யம் சுராக் ரண்யம் வேத கம்யம் பஜாமஹே!!"* உன்னதமான உயர்ந்த வேங்கட மலையில்



# கீதையின் பொன்மொழிகள்

- கண்ணனுக்குப் படைத்த உணவின் மிச்சத்தையே எப்போதும் உண்க.
- எம்பெருமானை நினைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் மூன்று முறை பத்து ப்ராணாயாமங்கள் செய்க.
- புண்ய தீர்த்தங்களுக்கும் திருத்தலங்களுக்கும் செல்க.
- நாம் செய்யும் கர்மத்தில், செயலைவிட "இது இறைவனுக்காக" என்ற அறிவே முக்கியம் என்று உணர்க.
- பசு, யானை, நாய், மனிதன் ஆகிய எவற்றுள் இருக்கும் ஆத்மாக்களும் ஞான வடிவத்தால் சமமானவர்களே என்ற சமதர்சன அறிவை வளர்த்துக் கொள்.
- பற்றற்ற மனம் ஆத்மாவை உயர்த்தும்: பற்றுள்ள மனம் ஆத்மாவை ஸம்ஸாரத்தில் கட்டும் என்றறிந்து மனத்தைப் பழக்கு.
- சுத்தமான இடத்தில் தனிமையில் பத்மாஸனத்தில் அமர்ந்து மனத்தை அடக்கி, பகவானை நினைத்து, நாள்தோறும் முப்பது நிமிடங்கள் தியானம் செய்.
- முக்குணமயமான உலகக் கட்டுகளிலிருந்து விடுபடக் கண்ணனை வேண்டிக்கொள்.
- அனைத்துக்கும் காரணமாகிய வாசுதேவனையே உண்ணும் சோறு பருகு நீராகக் கொள்.
- கடைசிக்காலத்தில் திருமாலை நினைத்துக் கொண்டே உயிர் துறப்பவன் மோக்ஷம் அடைகிறான். ஆகையால், எப்போதும் மஹா விஷ்ணுவையே நினைத்தல் வேண்டும்.

தொகுப்பு : டாக்டர் எஸ்.எல். ஸ்ரீநிவாசன்,
சத்ய மங்கலம்

வீற்றிருக்கும் திருவேங்கடமுடையான் சகல தேவதைகளுக்கும் நாயகனாகவும் வேதங்களின் முதலானவனாகவும் உள்ளார் அவரை வணங்குவோமாக.

*"ஸ்ரீ வேங்கடபதே தீனகதே*
*ரம்யாக்ருதேசூஷிதா!"*
*நம: சமஸ்த மர்த்யார்தி ப்ரமர்தன*
*கிமஸ்தி தே !!*

அனைத்து பக்தர்களின் தெய்வமாகவும், அனைத்து உயிர்களின் துன்பங்களைத் தீர்ப்பவனாகவும், வீற்றிருக்கும் திருவேங்கடமுடையானே உமக்கு நிகரானவர் யார் உள்ளார்?

*"சமஸ்த சுஜனாதாரம்*
*தோஷதூரம் குணாகரம்*
*ஸ்ரீ வேங்கடாசலா வாசம்*
*ஸ்ரீநிவாசம் பஜேஉனிசம் !!"*

சகல உயிர்களையும் காப்பவன், நல்லவர்களுக்கு நன்மையை அளிப்பவன், தோஷங்களை நீக்கும் குணமுடையவன் ஸ்ரீ வேங்கடகிரி நிலையன் ஆன ஸ்ரீநிவாசனை எப்பொழுதும் வழிபடுவோம்.

*"ஆனந்த தீர்த்தவரதே*
*தானவாரண்ய சானகே !*
*ஞான தாயினி சர்வே உசே*
*ஸ்ரீநிவாசேஸ்து மேமன:!!*

ஆனந்த தீர்த்தங்களுக்கு வரப்பிரதனாகவும், அனைத்து ஞானியர்களுக்கு ஞானமாகவும், அனைத்து மக்களுக்கும் தெய்வமான ஸ்ரீநிவாசர் என் மனதில் எப்பொழுதும் எழுந்தருள வேண்டும்.

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...

# ஆண்டாள் அலங்காரத்தில் திருச்சானூர் அலர்மேல் மங்கை தாயார்



# 11-11-2020 முதல் 19-11-2020 வரை நடைபெற்ற திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் கார்த்திகை பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்

















## 11-11-2020 முதல் 19-11-2020 வரை நடை பெற்ற திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் கார்த்திகை பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்

















அண்மையில் திருமலையில் திருமலையப்ப ஸ்வாமிக்கு, திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நடைபெற்ற புஷ்பயாக மஹோத்ஸவத் திருக்காட்சிகள்



திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வருடாந்திர கார்த்திகை பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு ஆந்திர மாநில அரசு சார்பில் பட்டுவஸ்த்திரங்களை சமர்ப்பிக்கும் மாண்புமிகு துணை முதல்வர் திரு. நாராயணஸ்வாமி அவர்கள்



திருவேங்கடமுடையான் ஆலயத்தில் கார்த்திகை தீபோத்ஸவம்

வடக்குத்திருமலைக்கு அஞ்சனாத்ரி என்று பெயர். திரேதாயுகத்தில் தற்சமயம் ஹம்பி என்று பெயர் பெற்ற பம்பா க்ஷேத்ரத்தில் வானர இனத்தைச் சேர்ந்த அஞ்சனை மற்றும் கேசரி ஆகிய இருவரும் மதங்கமுனிவர் ஆசிரமத் திற்குச் சென்று அவரை வணங்கி வருவார்கள். மகப்பேறு இல்லாத காரணத்தால் அஞ்சனாதேவியை மதங்கமுனிவர் திருமலையில் உள்ள ஆகாச கங்கை தீர்த்தத்தில் பன்னிரண்டு வருடம் தவம் புரியச் சொன்னார். அவர் நியமனப்படி அஞ்சனாதேவியும் பன்னிரண்டு வருடம் கடுந்தவம் புரிந்தாள். வாயுதேவன் நேரில் காட்சி கொடுத்து மாங்கனியைக் கொடுக்க, அஞ்சனா தேவியும் அதை பக்தியோடு பெற்றுக் கொண்டு உண்டாள். அதனால் நெற்கதிர் நிறமுள்ளவனாய் விளங்கும் ஒரு குமாரனை மார்கழி மாதம் மூல நட்சத்திரத்தில் பெற்றெடுத்தாள். அவனுக்கு அநுமன் என்று பெயரிட் டனர். அதனால் திருமலைக்கு அஞ்சன மாமலை என்று பெயர் ஏற்பட்டதாக பவிஷ்யோத்தரபுராணம் கூறுகிறது. இந்த வரலாறு பிரம்மாண்ட புராணத்தில் சற்று மாறுபட்டுள்ளது.

இந்த அநுமனின் வரலாற்றை இராமாயண உத்தரகாண்டத்தில் அகத்தியர் இராமபிரானுக்குச் சொல்லுகிறார். அதா வது திரேதாயுகத்தில் கேசரி என்ற அரக்கன் வாழ்ந்துவந்தான். அவன் குழந்தை வரம் வேண்டி சிவனைக் குறித்து தவம் செய்தான். கேசரிக்கு ஆண் வாரிசு ஏற்பட வாய்ப்பில்லையாயினும் அவனுக்கு பெண் குழந்தை பிறக்க ஆசீர்வதித்தார். கேசரி தனக்குப் பிறந்த அழகான பெண் குழந்தைக்கு அஞ்சனா என்று பெயரிட்டார்.

**அனுமனின் பிறப்பு மகிமை :**



அஞ்சனைக்கு திருமணப் பருவம் வந்ததும் அவளை, வானர ஜாதியைச் சேர்ந்த சக்தி வாய்ந்த கேசரி என்னும் உயர்ந்த வானரத் தலைவனுக்கு அவள் தந்தையார் மணம் செய்வித்தார். நீண்டநாட்களாக அவளுக்கு மகப்பேறு இல்லாதிருந்ததால் மனவருத்தமுற்றாள். அவள் தன் தந்தையை மகிழ் விக்க பிள்ளை வரம் வேண்டி பல முனிவர்களையும், தேவதைகளையும் வேண்டிக் கொண்டு கடுமையான தவம் புரிந்தும் பலனில்லாமல் போனதால் மனவருத்தமுற்றாள். தர்மதேவன் அவள் துன்பத்தைப் போக்க, திருமலையில் உள்ள ஆகாசகங்கையில் தவம் மேற் கொள்ளச் சொன்னார். அஞ்சனா தேவி யும் திருவேங்கட மலையில் கடுமையான




# அநுமனின் பெருமை

– திருமதி குமுதா வரதராஜன்,
சென்னை.

தவம் செய்தாள். ஆரம்ப நிலையில் உணவு உட்கொள்ளாமல் தவம் செய்யும் இவளைப் பார்த்த வாயுதேவன் தினமும் ஒரு பழத்தை அருகிலுள்ள காட்டிலிருந்து பறித்து காற்று மூலமாக அவள் கையில் விழச் செய்தான்.



அஞ்சனையும் அந்தப் பழத்தை உண்டு வந்தாள். ஒரு நாள் சிவனும் பார்வதியும் அந்தக் காட்டில் மகிழ்ச்சியாகத் திரிந்தனர். அந்த வனத்தில் இரண்டு குரங்குகள் அன்பின் மிகுதியால் விளையாடிக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் சிவனிடமிருந்து ஒரு சக்தி வாயுபகவானால் ஊதப்பட்டு பழமாக அஞ்சனாவின் கையில் விழ, அதையே அவளும் உண்டாள். ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரி வாக்கு அப்போது வாழ்த்தியதைக் கேட்டாள். அவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தை உயர்ந்த வானர சிசுவாக இருக்கும். அதுவே பிற்காலத்தில் பகவானாகிய ஸ்ரீராமபிரானுக்கு அரக்கர்கோமானான இராவணனைக் கொல்ல உறுதுணையாக இருக்கும் என்று கூறியதைக் கேட்ட அஞ்சனா தேவியும் மகிழ்ந்தாள். பின் ஒரு ஏகாதசி தினத்தில் ச்ராவண மாதம் ச்ராவண நக்ஷத்திரத்தில் ஒரு வியக்கத்தக்க குழந்தை பிறந்தது. அது பொன்மயமான நிறத்தில் பிறந்ததால் "ஆஞ்சநேயன்" என்று பெயர் சூட்டினாள்.



**அநுமனின் ஆற்றல் :**

இந்த ஆஞ்சநேயன் எப்போதும் பசியோடு இருந்தான். ஒரு நல்ல காலைப் பொழுதில் அஞ்சனை பழங்களைக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணம் கொண்டவளாய் குழந்தையைத் தனியே விட்டுவிட்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டு காட்டிற்குப் போயிருந்தாள். பசி மிகுதியால் வருந்திய குழந்தை தாய்ப் பாலில்லாமையால் நன்றாக அழுது கொண்டிருந்தது. அதேசமயம் உதித்துக் கொண்டிருக்கும் சூரியனைப் பார்த்து பழம் என்று நினைத்து அதை உண்பதற்காக ஆகாய மார்க்கத்தில் பறந்து சென்றது.

பாலசூரியனே உருவமெடுத்து வந்தாற்போல் உள்ளதாக நினைத்த தேவர்களும், வானவர்களும், யக்ஷர்களும் மிகுந்த ஆச்சர்யமடைந்தனர். இவன் வேகத்துக்கு நிகர் மனமோ, கருடனோ ஏன் வாயுவோகூட இல்லை என்று நினைத்தார்கள். இந்தக் குழந்தை பருவத்திலேயே சக்தி இத்தகையதென்றால் வாலிபப் பருவத்தில் எப்படி இருக்குமோ என்று வியந்தனர்.

வாயுபகவான் தன் புத்ரனான ஆஞ்சனேயனின் பறந்து செல்லும் தன்மைப் பார்த்து சூரிய பகவான் இவனை தகித்து விடுவாரோ என்று அச்சமுற்று, தான் பனிபோல் குளிர்ந்து காப்பாற்றிக் கொண்டு கூடவே சென்றார். பால சூரியனைப் போன்ற அனுமான் பல ஆயிரம் யோஜனை தூரம் கடந்து ஆகாசத்தை அடைந்து வாயுபகவான் போலவே மிகுந்த பலத்தால் சூரியன் அருகில் சென்று சேர்ந்தார்.

சூரியபகவானும், மிகுந்த பராக்ரமமுடைய இக்குழந்தை, தான் நினைத்த கார்யத்தை நிறைவேற்ற எண்ணம் கொண்டுள்ளது குறித்து கருணை மிகுதியால் அவன் மேல் வெப்பம் படாமல் காத்தார். அநுமன் சூரியனைப் பிடிக்க வந்த அதே சம



# அநுமன் பெற்ற வரம்

தேவர்களால் பூஜிக்கப்பட்ட பிரமனும் வாயுபகவானுக்குத் தன்மீது உள்ள மிகுந்த அன்பின் காரணமாக வாயுபுத்ரனான அநுமனுக்கு வரங்களைத் தந்தருளுமாறு தேவர்களிடம் விண்ணப்பித்தார். தேவேந்திரன் தான் அணிந்துள்ள பொற்றாமரை மாலையை கழற்றி கையிலெடுத்துக் கொண்டு வானரர்களில் உத்தமரான அநுமனை நோக்கி, இவனது தாடை தன் கையிலுள்ள வஜ்ராயுதத்தால் அடியுண்ட காரணத்தால் மலைமீது வீழ்ந்து முறிந்ததால் இவன் "அநுமன்" என்ற பெயரோடு விளங்கட்டும் என்றான். பிரமன் தொடக்கமாக எல்லா தேவர்களும் தங்களால் இயன்ற அளவு அநுமனுக்கு வரம் அளித்தனர். அவை பின்வருமாறு :

1. இந்திரன் வஜ்ராயுதத்தினால் மரணமில்லை என்று வரம் அளித்தார்.

2. உலகிற்கு ஒளி தரும் சூரியனும் தனது ஒளியில் நூற்றில் ஒரு கலையை அனுமனுக்குக் கொடுத்தார். மேலும், சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ளும் சமயத்தில் தானே சாஸ்திரத்தை உபதேசிப்பதாகவும் கூறினார். அதனால் வாக்கு வல்லமை பெற்று ஈடு இணையில்லாமல் விளங்குவான் என்றார். எங்ஙனேயென்னில், இராம லக்ஷ்மணர்களை மாறுவேடம் புனைந்து ரிச்ய முகபர்வதத்தில் பார்த்துப் பேசியது மூலம் தெளிவாக அறியலாம்.


3. தனது பாசத்தாலும், தண்ணீராலும் மரணம் உண்டாகாது என்ற வரத்தை வருணபகவான் வழங்கினார்.

4.யமதருமர் தனது தண்டத்தால் மரணமின்மையும், நீண்ட ஆயுளாரோக்யம், உடல் வலிமையை அருளினார்.

5. குபேரன் தன்னுடைய கதையால் போரில் வீழ்ச்சியின்மை மற்றும் சோர்வின்மையை வரமாக அளித்தார்.

6.பிரமன், இவன் அனைத்து பிரம்ம தண்டங்களாலும் கொல்ல முடியாதவனாகவும், மஹாநுபாவனாகவும், தீர்க்க ஆயுளை உடையவனாகவும் இருக்கக் கடவான் என்று வரமருளினார். மேலும், வாயுபகவானைப் பார்த்து, உனது புதல்வனாகிய மாருதி யாராலும் வெல்ல முடியாதவனாகவும், சத்ருக்களுக்கு பயத்தையும், மித்ரர்களுக்கு அபயத் தையும் தருபவனாகவும் விளங்குவான். நினைத்த இடத்தில் நினைத்த ரூபத்தை எடுத்து தடையில்லாது செல்ல வல்லவனாகவும், பாய்ந்து செல்லும் திறன் படைத்தவனாகவும் சோர்வில்லாமல் புகழ் பெற்றவனாகவும் விளங்குவான் என்று வரமளித்தார்.

7. தேவசிற்பி விச்வகர்மா பாலசூரியனைப் போலிருக்கும் இக்குழந்தை தன்னால் நிரூபிக்கப்பட்ட எல்லா சாஸ்திரங்களாலும் மரணமில்லாமலும், சிரஞ்சீவியாகவும் இருக்கக்கடவான் என்று வரமளித்தார்.



யத்தில், சூரியனையும், சந்திரனையும் பற்றவல்லவனான ராகுவும், சூரியனைப் பற்றுவதற்காக சூரிய ரதத்தின் அருகில் வந்தபோது அநுமனைப் பார்த்து பயந்து திரும்பிப் போய் விட்டான். சூரியனைப் பிடிக்க ராகு வரும் போது மற்றொருவன் சூரியனைக்கிட்டி பலாத்காரமாகப் பற்றியிருப்பதாக தேவேந்திரனிடம் சென்று ராகு முறையிட்டான். தேவேந்திரனும் ராகுவை சமாதானப்படுத்தி, தன் யானையாகிய ஐராவதத்தின் மீதேறி ராகுவை முன்னே செல்லவிட்டு அநுமனோடு இருக்கும் சூரியனின் அருகில் வந்தார். முகம் மட்டும் எஞ்சியுள்ள ராகுவைக் கண்ட அநுமன் அதைக்



கனியென நினைத்து சூரியனை விட்டு ஆகாயத்தில் மறுபடியும் ராகுவைப் பிடிக்க வந்தார். இதைப் பார்த்த ராகு பயந்து அலறியடித்து இந்திரனையே அடைக்கலமாகப் பற்றினான். இந்திரனும் ராகுவிற்கு தைர்ய மூட்டினார். அப்போது அநுமன் ஐராவதத்தை ஒரு பழமென எண்ணி அதன் மீது பாய்ந்தார். அப்போது இந்திரன் அநுமன் மீது கோபம் கொள்ளாமல், தன் வஜ்ராயுதத்தால் மெள்ளத் தட்டினார்.

**வாயு பகவானும் அநுமனும் :**

இந்திரனின் வஜ்ராயுதத்தால் அடியுண்ட அநுமனும் மலையின் மீது வீழ்ந்ததனால் தாடை முறிந்தது. இதை அறிந்த வாயுபகவான் உலகெங்கும் காற்று வீசாமல் செய்தார். இதனால் துன்பப்பட்ட தேவர்களும் மனிதப் பிறவிகளும், அநுமன் தேக ஆரோக்யம் பெறவும், உலக உயிர்கள் வாழ்வதற்கும் பிரமனிடம் கைகளைக் கூப்பிய வண்ணம் இவ்வாறு முறையிட் டனர். உயிர் வாழ்வதற்குப் பதியாகவும், பிராணாதாரமாகவும் உள்ள இந்த வாயு பகவான் தங்களுக்குத் துன்பம் தருவதாகச் சொன்னார்கள். பிரமனும் இவர்கள் வேண்டுகோளை ஏற்றார். வாயு பகவான் புத்ரனான அநுமன், தேவர்களின் தலைவனான இந்திரனால் ராகுவின் விண்ணப்பத்திற்கு இணங்கி அடித்துத் தள்ளப் பட்டிருக்கிறான்.

தன் புத்ரனுக்கு நேர்ந்த துன்பத்திற்காக கைவிடப் பட்ட உலக உயிர்கள் சுவாசிக்கக் காற்று இல்லாததால் மூச்சு விடமுடியாமல் கட்டைகள் போல் கிடக்

## அநுமன் மாவீரன்

**இராமாவதாரத்தில் தெற்கு திசையில் சீதாதேவியை தேடுவதற்காக சுக்ரீவனால் அனுப்பப்பட்ட மாவீரனான அநுமன், தனக்கு ஏற்பட்ட தடைகளைக் கடந்து நூறு யோசனையுள்ள கடலைக் கடந்து இலங்கையில் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதாதேவியை தந்திரமாக சந்தித்துப் பேசி ஆறுதல் கூறினான். இராமனிடம் பெற்ற கணையாழியைச் சீதையிடம் கொடுத்து அவளுக்கு நம்பிக்கையூட்டி, பின்னர் அவள் கொடுத்த சூடாமணியை இராமனிடம் அளித்து சீதை இராமன் ஆகிய இருவர் மனத்திலும் நம்பிக்கை ஊட்டினவனானான். பின்பு நேர்ந்த பெரும் போரில் பெரிய அரக்கர் தலைவர்களைக் கொன்று இராமனை மகிழ்வித்தான், இராமனுடைய முடிசூட்டுவிழாவில் சீதையிடமிருந்து பரிசாக முத்தாரம் பெற்றவன், பிறர் செயற்கரிய காரியங்கள் புரிந்த மாவீரன் என்பதை இந்த நிகழ்வுகளினால் அறியலாம்.**

**நடுநிலையாளருக்கு உள்ள அறிவையும், மதி நுட்பமும் நிறைந்தவர். சுக்ரீவனின் மந்திரியாகத் திகழ்ந்தவர். அதனால்தான் வால்மீகி கணையாழியைப் பெற்றுக் கிளம்பும் அநுமனை மஹாநுபாவன் என்று குறிப்பிடுகிறார். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த உபய வேதாந்த வித்வானான கோவிந்தராஜர் என்னும் ஆசார்யர் தாம் இயற்றிய பூஷணம் என்னும் இராமாயண வ்யாக்யானத்தில் அநுமன் மாறுவேடம் புனைவதில் வல்லவன் என்றும், இதனை நிரூபிக்கும் வகையில் பிராம்மண பிரம்ம சாரி மாறுவேடம் பூண்டு இராம லக்ஷ்மணர்களை ரிச்ய முக பர்வதத்தில் சந்தித்ததையும் நினைவு கூறுகிறார்.**





**திருமலையில் அநுமன் :**

அனுமன் பிறந்த அந்த அஞ்சனாசலத்துக்கு அதிபதி திருவேங்கடவன். இதுபற்றியே திருவேங்கடவன் அஷ்டோத்ர சத நாமாவெளியில் "ஓம் அஞ்சனா கோத்ர பதயே ஸ்ரீ வேங்கடேசாய நம:" என்ற திருநாமம் (81) வந்தது காணலாம். மேலும், அஞ்சனைக்கு அருமையான தனயனை அளித்த திருவேங்கடவனுக்கு "ஓம் அஞ்சனா ஸுததாத்ரே ஸ்ரீவேங்க டேசாய நம:" என்ற திருநாமமும் உள்ளது காணலாம். குலசேகர ஆழ்வாரும் தாம் அருளிய பெருமாள் திருமொழியில் அஞ்சனமாமலையில் ஏதேனும் ஒரு பொருளாகப் பிறக்க விரும்பினார். இதுபற்றிய "எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனும் ஆவேனே" என்று பாடுகிறார்.

அஞ்சனமாமலையில் பிறந்த அநுமனே பேடி ஆஞ்சனே யராக திருமலையில் மலையப்பனை சேவித்தவண்ணம் எதிரில் கோயில் கொண்டுள்ளது காணலாம். இந்த சந்நிதியில் மேற்கூறிய கோவிந்தராஜர் என்னும் ஆசார்யர் இராமா யணத்துக்கு பூஷணம் என்னும் வ்யாக்யானத்தை எழுதிய தாகக் கூறுவர்.

மலையப்பனின் ப்ரம்ம உற்சவ ஆறாவது நாளன்று காலை அநுமன் தோளில் மலையப்பன் வீற்றிருந்து நமக்கு அருள் புரிய பவனி வருவதைக் காண்பது கண் படைத்த பயனாகும்.

கிறார்கள். அதனால் வாயு பகவான் இருக்குமிடம் சென்று சூரியன் ஸ்வர்ணம் அக்னி ஆகியவற்றுக்கு நிகரான ஒளியையுடைய குழந்தையை வாயுபகவான் தன் மடியில் கிடத்திக் கொண்டிருந்ததை பிரமன், தேவர்கள், கந்தர்வர்கள், ரிஷிகள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் ஆகிய இவர்களோடு குழந்தையைப் பார்த்து மனம் உருகினார். அப்போது பிரமனைப் பார்த்து வாயுதேவன் அக்குழந்தையைக் கையிலேந்திக் கொண்டு எழுந்து நின்று அவர் திருவடிகளில் மூன்று முறை நமஸ்கரித்தார். பிரமன் வாயு பகவானை எழுந்திருக்கச் செய்து குழந்தையைத் தன் கையால் மிக்க ப்ரீதியுடன் தடவிக் கொடுத்தார்.



அதனால் குழந்தை முன்போலவே ஜீவித்திருப்பதைப் பார்த்த வாயு பகவான் முன்போலவே சகல ஜீவராசிகளிடத்திலும் சஞ்சரித்தார். இதனால் அனைத்து உயிர்களும் மகிழ்ச்சியுற்றது.

தேவர்கள் எல்லாரும் பிரமனை முன்னிட்டு வாயு பகவானிடம் விடை பெற்று அவரவர்கள் இருப்பிடம் சென்றனர். வாயு பகவான் தன் புதல்வனை எடுத்துக் கொண்டு அஞ்சனாதேவியிடம் கொடுத்துவிட்டு அநுமன் பெறற்கரிய வரங்கள் பெற்றதை விவரமாகச் சொல்லி மறைந்தார். இவ்வாறு அகத்தியர் இராம பிரானிடம் கூறினார்.

# 108 திவ்விய தேச வைபவம்



# தென்திருப்பேரை
## (நவத்திருப்பதி–8)

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

***''சென்று சேர்வார்க்கு உசாத்துணை அறுக்கும் சௌந்தர்யம் மாநகரிலே கோஷிக்கும்''*** என்று ஆசார்ய ஹ்ருதயம் புகழும் திவ்யதேசம். சேர்பவர் ஆழ்வார். உசாத்துணை அவரது மனம் அறுக்கும். கவரும்–சௌந்தர்யம் –பேரழகு–ஆழ்வாரின் மனதைக் கொள்ளை கொள்ளும் பேரழகு படைத்தவன் இவ்வெம்பெருமான். பூமி பிராட்டியிடம் மிகுதியான அன்புடன் இருந்தார் பகவான். பெரிய பிராட்டி இதைக் கண்டாள்.

துர்வாசரை அணுகினாள். தன் வடிவத்தைப் பூமி தேவியும், பூமிதேவியின் வடிவத்தைத் தானும் பெற வேண்டும் என்று வேண்டினாள். துர்வாசர், பகவான் இருக்குமிடம் வந்தார். எம்பெருமான் பூமிதேவியுடன் இனிமையாக வீற்றிருப்பதையும், பூமிதேவி, பகவானின் பேரழகில் மயங்கி துர்வாசரை ஏறெடுத்தும் பார்க்காத தால், இதுதான் தருணம் என்று, துர்வாசர், பூமிதேவியை நோக்கி நீ லக்ஷ்மியின் உருவத்தைப் பெறுவாயாக என்று சபித்தார். பூமிதேவி தன்னுடைய இயற்கையான நிறத்தை இழந்து, லக்ஷ்மியின் பொன் நிறத்தை அடைந்தாள்.

பூமிதேவி முனிவரை பணிந்து சாப விமோசனம் வேண்ட, முனிவர் அஷ்டாக்ஷரத்தை பூமிதேவிக்கு உபதேசித்து, நீ தாமிரவருணியில் நீராடி இந்தத் திவ்ய தேசத்து எம்பெருமானை அஷ்டாக்ஷரம் மூலம் ஜபித்தால், பழைய உருவம் கிடைக்கும் என்றார். பங்குனி மாத பௌர்ணமி அன்று, பூமாதேவி ஜபிக்கத் தொடங்கினாள்.

அப்போது, பூமிதேவி மஹாலக்ஷ்மியின் வடிவத்தில் இருந்ததாக “பேரம்” என்னும், மஹாலக்ஷ்மி வடிவத்தில் இருந்து ஜபித்ததால் “திருப்பேரம்'' என்றும், இதுவே மருவி “திருப்பேர்'' என்று இந்த திவ்ய தேசம் அழைக்கப்படுகிறது என்றும், வேறொரு திவ்ய தேசத்தில் இருந்து, இதை வேறுபடுத்திக் காட்ட “தென் திருப்பேரை” திவ்ய தேசமாக இது வழங்கப்படுகிறது என்றும் கூறுவர்.

தபஸ் செய்யும்போது, தாமிரவருணியில் கிடைத்த மீன் வடிவான இரு குண்டலங்களை எடுத்து பகவானுக்கு அர்ப்பணிக்க, அவர் அதைக் காதுகளில் அணிய, பகவான் “மகரநெடுங்குழைக்காதர்” ஆனார்.

தன்னுடைய ஆசார்யனிடம் செய்த குற்றத்தால் பீடிக்கப்பட்ட வருணன், அசுரர்களுடன் போரிடும்போது தோற்று “வருணபாசம்” தன் நாடு நகரம் எல்லாம் இழந்து குருவின் கட்டளைப்படி, தென் திருப்பேர் அடைந்து மகர தீர்த்தத்தில் நீராடி பகவானைத் தரிசித்து இழந்தவை யாவற்றையும் பெற்றான் என்றும் சொல்வர்.

**சிறப்புகள்**

விதர்ப்ப தேசத்தில் 12 ஆண்டுகள் மழையே இல்லாமல் வறண்டு, பஞ்சம் சூழ்ந்த போது அந்நாட்டு மன்னன், ஆசார்யரின் கட்டளைப்படி இங்கு வந்து மகர தீர்த்தத்தில் நீராடி எம்பெருமானை சேவித்து வேண்ட, அந்த நாட்டில் வறட்சி நீங்கி, வளம் பொங்கியது என்றும், அதனால் இந்த எம்பெருமான் "நிகரில் முகில் வண்ணன்" ஆனார் என்பர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் மூலவர் | : | நிகரில்முகில் வண்ணன் (கிழக்கு நோக்கிய அமர்ந்த கோலம்) மகர நெடுங்குழைக் காதர். |
| தாயார் | : | குழைக்காது வல்லி நாச்சியார், திருப்பேரை நாச்சியார். (தனித்தனியே இரு தாயார் சன்னதிகள்) |
| விமாநம் | : | பத்ர விமாநம் |
| தீர்த்தம் | : | சுக்ர தீர்த்தம், சங்கத்தீர்த்தம், |
| ப்ரத்யக்ஷம் | : | சுக்ரன், பிரம்மா, ஈசான்யருத்ரன். |
| ஆகமம் | : | பாஞ்சராத்ரம் |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார் |

**விசேஷம் :**

"கூடுபுனல் துறையும் குழைக்காதன் திருமாலும் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்பது பழமொழி. நம்மாழ்வார், இந்தத் திருத்தலத்துக் குழந்தைகள் விளையாடுவதை *"வேத ஒலியும், விழா ஒலியும் பிள்ளைக் குழா விளையாட்டு ஒலியும் அறாத் திருப் பேரையில் சேர்வன் நானே"* என்கிறார். இப்போதும், சந்நதிக்கு எதிரே பகவான் நன்கு பார்த்து களிக்கும் பொருட்டு (பிள்ளைக் குழா விளையாட்டு இடம் உள்ளது) கருடன் சந்நிதி சற்று இடப்பக்கம் ஒதுங்கி இருப்பதை சேவிக்கலாம். சுக்ர க்ரஹத்தின் பரிகார தலமாகவும், சனியின் தலமாகவும் கூறுவர்.

**த்யானச்லோகம் :**

*"ப்ரக்யாதே மகராங்க குண்டலதர: ப்ராலம்பி*
*கர்ணாஹ்வய:*
*தத்வல்ல்யா ஸஹ பார்வதீச வரதச் சாஸீந ரூபோ ஹரி: |*
*யோவை பத்ர விமாநமத்ய விலஸச் ச்ரீசங்க தீர்தாந்திகே,*
*த்ஸமிந் தக்ஷிண திக் ப்ருஹத் புரவரே த்யாயாமி தம்*
*ப்ராங்முகம்||"*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

## பாசுரம்

*"வெள்ளைச்சுரி சங்கொடு ஆழ்ஏந்தித்*
*தாமரைக் கண்ணன் என்நெஞ்சினூடே*
*புள்ளைக்கடாகின்ற வாற்றைக்காணீர்*
*என் சொல்லிச்சொல்லுகேன்? அன்னைமீர்காள்!*
*வெள்ளச்சுகமவன் வீற்றிருந்த*
*வேத ஒலியும் விழா ஒலியும்*
*பிள்ளைக்குழா விளையாட்டொலியும் அறாத்*
*திருப்பேரையில் சேர்வன் நானே."*

– நம்மாழ்வார் பாசுரம்

*"அரைசாகி வையம் முழுதும் ஆண்டாலும் இன்று*
*கரை சாரா மாட்டார்கள் கண்டீர் - முரைசு ஆரும்*
*தென்திருப்பேரைப் பதியான் சீர்கேட்டு நாவில் அவன்*
*தன் திருப்பேரைப் பதியாதார்."*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்


## சாஸ்த்திர நீதிகள்–84

முகம் பத்ம தளா காரம் வச சந்தன சீதளம் |
ஹ்ருத் கர்த்தரீ சமம் சாதி விநயம் இதி தூர்த்த லக்ஷணம் ||

1. முகம் எப்போதும் தாமரை மலர்போல் வைத்துக் கொள்ள வேண்டும்.
2. சந்தனம் குளிர்ச்சியாக இருப்பது போல குளிர்ச்சியான பேச்சுடன் பழக வேண்டும்.
3. கத்தரிக்கோல் போல, கெட்ட விஷயங்களில் மனதை அலைய விடாமல் பழக வேண்டும்.

இவையெல்லாம் நல்ல குணமுடைய மனிதன் தெரிந்து நடப்பானாம்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



### நாமாக்கள்

481. *ஓம் அஸத் நம:*

(தீயவர்களுக்கு எண்ணற்ற பிறவியை அளிப்பவனே)

*ஓம் மைதில்யை நம:*

(மிதிலா வம்சத்து அரசியே)

482. *ஓம் அஸத்க்ஷரம் நம:*

(அதனால், அஸத் என்றும் க்ஷரம் என்றும் சொல்லப்படுபவனே)

*ஓம் ப்ரிய தர்சனாயை நம:*

(அழகிய தோற்றம் உள்ளவளே)

483. *ஓம் அவிஜ்ஞாதா நம:*

(சாதுக்களின் தவறுகளைக் கவனிக்காதவனே)

*ஓம் ஸத்யபாமாயை நம:*

(என்றுமே, மாறுதலே இல்லாமல் பொலிவுள்ளவளே)

484. *ஓம் ஸஹஸ்ராம்ஸு நம:*

(ஆயிரமாயிரம் ஜ்நானம் உள்ளவனே)

*ஓம் வேதவேத்யாயை நம:*

(வேதங்களால் அறிந்து கொள்ளத்தக்கவளே)

485. *ஓம் விதாதா நம:*

(தண்டிக்கும் யமனையும் தன் வசத்தில் வைத்திருப்பவனே)

*ஓம் ஸீதாயை நம:*

(ஜனக புத்ரியே)

486. *ஓம் க்ருதலக்ஷண: நம:*

(தன் அடியார்களுக்குத் தன் சின்னத்தை அளிப்பவனே)

*ஓம் ப்ரணத போஷிண்யை நம:*

(பூஜிப்பவர்களுக்கு ஆரோக்யத்தையும், ஞானத்தையும் அளிப்பவளே)

487. *ஓம் கபஸ்திநேமி: நம:*

(ஒளி வீசும் சக்ராயுதத்தைத் தரிப்பவனே)

*ஓம் மூலப்ரக்ருத்யை நம:*

(உலகங்களுக்கு எல்லாம் மூல காரணமாக இருப்பவளே)

488. *ஓம் ஸத்த்வஸ்த: நம:*

(இதயத்தில் வசிப்பவனே)

*ஓம் ஈசானாயை நம:*

(எல்லாவற்றுக்கும் உரிமையும், அவற்றை நியமிப்பவளே)

489. *ஓம் ஸிம்ஹ: நம:*

(பக்தர்கள் என்று அறியாமல் தண்டிக்கும் யமனையும் இம்சிப்பவனே)

*ஓம் சிவதாயை நம:*

(மங்களத்தையே தருபவளே)

490. *ஓம் பூதமஹேஸ்வர நம:*

(ப்ரஹ்மருத்ராதிகட்டுத் தலைவனே)

*ஓம் தீப்ரதிபிந்யை நம:*

(மிக அதிகமான ப்ரகாசம் உள்ளவளே)

*ஸ்ரீமதே பூ, குண்டல கர்ணீ தேவீ ஸமேத ஸ்ரீதீர்க்க மகர குண்டல தராய ஸ்ரீமகர வரலஸத் குண்டல தராய நிகரில் முகில்வண்ணன் பரப்ரஹ்மணே நம:*

குறிப்பு : ஸ்ரீவைகுண்டத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தாமிரவருணி தென்கரையில் இவ்வாலயம் உள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

## கீதையின் பொன் மொழிகள்



- **மறுபடியும் பிறவி வேண்டுமா வேண்டாமா என யோசித்து முடிவெடு.**
- **பிறவி வேண்டாதவர்கள் மீளுதல் இல்லாத வைகுந்தத்தை அடையும் ஒளிமயமான அர்ச்சிராதிப் பாதையில் ஆசை கொள்.**
- **ப்ரபஞ்சமே பரம் பொருளால் தாங்கப் படுகிறது. பரம்பொருள் நம்முள் மறைந்து உறைகிறார் என்று உணர்க.**
- **கண்ணனின் மனித உடலையும், விளையாட்டுக்களையும் மட்டுமே பார்த்து அவனைக் குறைவாக மதிப்பிட்டு வீணாகாதே.**
- **பயன் கருதாமல் கண்ணனிடம் பக்தி செய்தால் அவரே பொறுப்பேற்றுத் தன்னையே கொடுக்கிறான் என்று உணர்க.**

**தொகுப்பு : டாக்டர் எஸ்.எல். ஸ்ரீநிவாசன், சத்ய மங்கலம்**

“தியானம் செய்வதால் க்ருதயுகத்திலும், யக்ஞங்கள் செய்வதால் த்ரேதாயுகத்திலும், அர்ச்சித்தலால் துவாபரயுகத்திலும், நாம சங்கீர்த்தனத்தால் கலியிலும் ஸ்ரீ ஹரி, பக்தர்களுக்கு அனுகிரஹம் புரிவார். எனவே அந்த தேவாதி தேவனான திருவேங்கடமுடையானை பூஜிக்கும் பக்தர்களை பக்தியுடன் பூஜிப்பாய்” என்று கூறி அரசனை ஆசீர்வதித்து விட்டு அன்னமய்யா மீண்டும் திருமலை வந்தடைந்தார்.

திருமலை வந்தடைந்த அன்னமய்யா த்விபதங்களால் ஆன “சிருங்கார மஞ்சரி” என்ற காவியத்தை இயற்றி இறைவனுக்கு சமர்ப்பித்தார், பல கீர்த்தனைகளால் வேங்கடவனைத் துதித்ததால் அவரது வாக்கிற்கு ஒரு தெய்வீகத் தன்மை ஏற்பட்டது. சிறிது காலத்தில் அன்னமய்யா வேங்கடவனின் ஆஸ்தானப்பாடகரானார்.

### அன்னமய்யா இயற்றிய நூல்கள் :

அன்னமய்யா வேங்கடவனுக்கு சமர்ப்பித்த 32 ஆயிரம் கீர்த்தனைகளில் சில யோக மார்க்கத்தைக் காட்டுபவை, சில சிருங்கார சங்கீர்த்தனைகள், இன்னும் சில வைராக்கியத்தை வலியுறுத்துபவை, இவற்றைத் தவிர பிரபந்தங்கள் வரிசையில் த்விபத காவிய வடிவில் இராமாயணம், வேங்கடாசல மஹாத்மியம் என்ற சமஸ்கிருத காவியம், சிருங்கார மஞ்சரியோடு பன்னிரெண்டு சதகங்களையும் எழுதியதாகத் தெரிகிறது, அந்த 12 –ல் கிடைத்திருப்பது வேங்கடேசுவர சதகம் ஒன்றே.

### தாள்ளபாக்க திம்மக்கா :



அன்னமய்யாவின் முதல் மனைவி பெயர் திருமலாம்பா, இவருக்கு திருமலம்மா, திருமலக்கா, திம்மக்கா என்ற பெயர்களும் வழங்கி வந்தன. தெலுங்கு மொழியில் முதல் கவியரசி தாள்ளபாக்க திம்மக்காதான், இவர் எழுதிய ஒரே நூல் “சுபத்ராகல்யாணம்”. காவியங்களின் தரத்தில் இதுமிக உயர்ந்து காணப்படுகிறது. மஹாபாரதக் கதையை ஆதாரமாகக் கொண்டு தேனினும் இனிய தெலுங்கு மொழியில் இந்த காவியம் இயற்றப்பட்டுள்ளது. அதில் அர்ஜுனனின் பாத்திரம் அமர அஹோபில க்ஷேத்திரத்தின் வரிசையில் உள்ள வேங்கடாத்ரி நாதனையும், கஞ்சி வரதனையும் வணங்கியதாக மூலத்தில் இல்லாத விஷயத்தைக் கூறி திருமலை வேங்கட நாதனின் மீது தனக்குள்ள பக்தியைக் காட்டிக் கொண்டுள்ளார். திம்மக்கா, சுபத்ரா பாத்திரத்தை மாற்றியமைத்துள்ள விதம், ஒரு தெலுங்கு தேசப் பெண்மணியை அப்படியே



## அன்னமய்யா - புரந்தர தாசர் :





அன்னமய்யாவிற்கு திருவேங்கடமுடையானைப் போல, புரந்தர தாசருக்கு பாண்டுரங்க விட்டலன் உபாசனை தெய்வம். அவர் வியாசராயரின் சீடர், ஹரிதாச சம்பிரதாயத்தைச் சேர்ந்தவரான அவர் விட்டலன் என்ற முத்திரையுடன் சுமார் 5 லட்சம் சங்கீர்த்தனைகள் எழுதியதாகக் கூறப்படுகிறது. புரந்தரதாசர் அன்னமய்யா வின் சங்கீர்த்தனைகளைப் பற்றிய வைபவங்களைப் பற்றி அறிந்தார். அவரது பாடல்களைக் கேட்ட புரந்தரதாசர் அன்னமய்யாவை சாட்சாத் ஸ்ரீ ஹரியின் அம்சமாகவே பாவித்து அவரை நேரில் காண விரும்பினார். திருமலைக்கு வந்து ஸ்வாமியையும் அவரது பக்தரான அன்னமய்யாவையும் தரிசித்தார். அன்னமய்யாவும் அவரை பாண்டுரங்க விட்டலனாகவே பாவித்தார்.

உருக்கி வார்த்தாற் போன்று அமைந்துள்ளது. இதில் திம்மக்காவின் கவிதை சக்தி நன்கு வெளிப்படுகின்றது. இதைப் பின்பற்றி பின்னர் சேமகூர வேங்கடகவி போன்றவர்கள் கூட பின்பற்றினர்.

### அன்னமய்யா சந்ததி :

தனது சங்கீர்த்தனைகளால் திருமலை நாயகனை திருப்தி செய்த அன்னமய்யா அவரது ஆசியுடன் நரசய் யாச்சார்யன், திருமலாச்சார்யன் என்ற இரு மகன்களைப் பெற்றார். இவர்கள் இருவருமே தெலுங்கு மொழியில் கவிதை இயற்றும் திறமையும், பக்தியிலும் அன்னமய்யா வின் வாரிசாகவேத் திகழ்ந்தனர். பெத்த திருமலாச்சார் யன் என்று புகழ்பெற்ற திருமலாச்சார்யர் இவரும் தந்தையைப் போலவே தினம் ஒரு சங்கீர்த்தனம் இயற்றி ஸ்வாமிக்கு சமர்ப்பித்து வந்தார். இவர் சில ஆத்யாத்ம சங்கீர்த்தனைகள், வேங்கடேசுவர வசனங்கள், சிருங்கார தண்டகம், சக்ரவாள மஞ்சரி, ஸ்ரீ வேங்கடேஸ்வரா நீதி சீச சதகம், ஸ்ரீவேங்கடேஸ்வர ப்ரபாத ஸ்தவம் போன்ற கிரந்தங்களை இயற்றி வேங்கடவனின் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இவர் கல்யாண உற்சவங்கள் போன்று பல சேவைகளை திருமலையில் ஆரம்பித்து வைத்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. அவரின் மகன் சின்ன திருமலய்யா, பெத்த வேங்கள நாதன், திருவேங்கள நாதன் (சின்னண்ணா), கோனேடி திருவேங்கள நாதன் ஆகியோரும் தாத்தா அன்னமய்யா போன்றும், தந்தை திருமலாச்சார்யார் போன்றும் இறைவனுக்கு சாகித்ய சேவை ஆற்றி வந்தனர். அன்னமய்யாவின் கொள்ளுப் பேரனான சின்ன திருமலய்யாவின் மகள் திருமலாம்பாவின் குமாரன் ரேஹபரா வேங்கடேஸ்வரன் ஆகியோரும் வேங்கடவனின் அருளைப் பரிபூர்ணமாகப் பெற்று சங்கீத சாகித்யத்தில் சிறந்து விளங்கி தங்கள் வாழ்க்கையை அதற்காகவே அர்ப்பணித்துக் கொண்டு மேன்மை யுற்றனர். இவ்வாறாக ஒரு சிறிய விதை பெரிய ஆல விருட்சம் ஆவது போல் அன்னமய்யா தொடங்கி வைத்த சாகித்ய பதார்ச்சனை என்ற சங்கீத யக்ஞும் அவருக்கு பின் ஐந்து தலைமுறைகள் தொடர்ந்தது. இந்த வம்சத் தினர் இறைவனைப்பாடி தாங்கள் தன்யர்கள் ஆனதுடன் இந்தப் பாடல்களைப் பாடும், கேட்கும் அனைவருக்குமே வேங்கடவனின் அருள் கிட்டுமாறு செய்து விட்டனர்.

இந்த யக்ஞுத்திற்கு மூலகாரணமான அன்னமய்யா நிறைவான வாழ்க்கை வாழ்ந்து தனது 95 –வது வயதில் தன் ஆராதனை தெய்வமான வேங்கடவன் திருவடி நிழலையடைந்தார். பதகவிதா பிதாமகர் சங்கீர்த்தனாச் சாரியார் பஞ்சமாகம் சார்வ பௌமன, திராவிடாகம சார்வ பௌமன் போன்ற பல விருதுகளைப் பெற்ற அன்னமய் யாவின் சரித்திரம் திருமலை சரித்திரத்தோடு எப்போதும் இணைந்திருக்கும் ஒரு முக்கிய அத்தியாயமாக இருக்கும்.

தெலுங்கு மூலம்: டாக்டர். மன்னூரு சிவப்ரவீண்
தமிழாக்கம்:திருமதி ராதாராமநாதன், 93936 09240

முற்றும்...

**அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல்–9**

# மற்ற தானத்திற்கும் கன்னிகா தானத்திற்கும் உள்ள வேறுபாடு

**பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி, 94434 39963**



சென்ற இதழில் கன்னிகாதானத்தின் சிறப்பைப் பற்றிப் பார்த்தோம். தானத்திலேயே மிகவும் உயர்ந்தது அன்னதானம் என்று சொல்வார்கள். ஆனால், அன்னதானத்திற்கு மகா தானம் என்கிற சிறப்பு கொடுக்கப்படவில்லை. ஆனால், கன்னிகாதானத்திற்கு மகாதானம் என்கிற சிறப்பு உண்டு.

மற்ற தானம் கொடுப்பதில் ஒரு முறை உண்டு. தானம் கொடுப்பவர் நின்று கொண்டு கொடுக்க வேண்டும். தானம் வாங்குபவருக்கு சந்தனம் தாம்பூலம் கொடுத்து முறையாக அவரை ஆசனத்தில் உட்கார வைத்துக் கொடுக்க வேண்டும். ஆனால், கன்னிகாதானத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும்.

ஒரு ஆசனத்தில் தானம் கொடுக்க இருக்கும் பெண்ணின் தகப்பனார் உட்கார்ந்திருப்பார். அவருடைய மடியிலே மணப்பெண் அமர்ந்திருப்பார். பக்கத்திலே பெண்ணின் தாயார் நின்று கொண்டிருப்பார். தானம் வாங்குகின்ற மணமகன் நின்று கொண்டு வாங்குவார். பக்கத்தில் அவர் பெற்றோர்கள் நிற்பார்கள். கன்னிகாதானத்தில் இருவருக்குமே ஏற்றம். கொடுக்கிறவருக்கு கூடுதல் ஏற்றம். காரணம் என்ன என்று சொன்னால் இது ஒரு குறிப்பிட்ட மனிதனின் உயர்வுக்கு மட்டும் கொடுக்கக்கூடிய தானம் கிடையாது.இந்தப் பெண்ணை ஏற்கக்கூடிய மணமகன் அந்தப் பெண்ணோடு இணைந்து பல்வேறு அறங்களை ஏற்க வேண்டும். அதற்குத்தான் இல்லறம் என்று பெயர். இல்லறமல்லது நல்லறமன்று என்பது இந்து மத அடிப்படை சாத்திரம். உலகில் உள்ள அத்தனை தர்மங்களையும் இருவருமாகவே செய்ய வேண்டும்.

ஏன் உலக நன்மைக்காக ஒரு மக(ா)னைப் பெற்றுத்தர வேண்டும் என்றாலும் இவர்கள் இருவர் மூலமாகவே முடியும் அல்லவா. எனவே தலையாய அறம் தான் திருமண பந்தம் என்பது. கன்னிகாதானத்தின் மூலமாகத்தான் இந்த மாபெரும் தர்மம் நடைபெறுகிறது.

தானத்தின் மூலமாக நடைபெறுவதால் இதை தான தர்மம் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட உயர்வு வேறு எந்த தானத்திற்கும் கிடையாது. கன்னிகா தானத்தின் பொழுது சொல்லப்படுகின்ற மந்திரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் உண்டு.

*கன்யாம் கனக ஸம்பந்தாம்*
*ஸர்வாபரண பூஷிதாம்*
*தாஸ்யாமி விஷ்ணவே துப்யம்*
*ப்ரம்லோகம் ஜிகீஷயா*

பெண்ணை எப்படித் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கட்டிய புடவையோடு அனுப்புவது கிடையாது. அவள் நம் வீட்டு செல்வம். அந்தப் பெண்ணுக்கு என்னென்ன ஆபரணங்கள் எல்லாம் செய்து அணிவிக்க சக்தி இருக்கிறதோ அந்தச் சக்திக்கு கொஞ்சமும் குறையாமல் செய்ய வேண்டும்.

இதில் 50 பவுன் 100 பவுன் எல்லாம் கணக்கு கிடையாது. பெண்ணினுடைய தகப்பனாருடைய சக்திக்கு ஏற்ற வண்ணம் அவளை அலங்கார பூஷிதையாக எல்லாவிதமான அலங்காரங்களோடு தானம் தர வேண்டும். ஒரு பொற்



கும்பத்தை அலங்காரங்கள் செய்து தானம் தருவது போல பெண்ணை மணமகனிடம் ஒப்படைக்கக்கூடிய அற்புத விஷயம் இது.

கன்னிகாதானம் செய்பவர் கிழக்கு நோக்கி உட்கார, வரன் மேற்கு நோக்கியும், கன்னியின் தாய் வடக்கு நோக்கியும் இருக்க வேண்டும். தாரை வார்க்கும் பொழுது, கன்னியின் தகப்பனார் சொல்லும் மந்திரத்தின் பொருள்.

இந்த பூமியில் என்னால் படைக்கப்பட்டு என்னுடன் இருந்து, என்னுடைய எல்லாமுமான உன்னை தானம் அளிப்பதால் தந்தையான எனக்கு நற்கதி கிடைக்கட்டும். (**கன்யேமே ஸர்வதோபூயா:தவத்-தானாத் மோக்ஷமாப்னுமாம்**) அதற்கு பிறகு தீர்த்தத்தை தானத்திற்காக விடுவார்கள். அது உள்ளங்கை வழியாக தாரையாக விழும். அப்போது சொல்லப்படும் மந்திரத்தின் பொருள் அற்புதமானது.

ஒளிரும் கர்ப்பத்தில் தோன்றி, ரத்தினம் போல் பிரகாசித்து, அனைத்து புண்ணிய பலன்களையும், சாந்த நிலையும் பெற்றுத்தந்த கன்னியான இவளை சந்ததிகளுடன் இருக்கும்படி செய்வதற்காக கொடுப்பதாய் விஷ்ணு ரூபமான மணமகனின் ஒவ்வொரு சரணத்திலும் விழும்படியாக உள்ளங்கையில் இருந்து நீரை தாரையாக விடுகிறேன் என்று சொல்லி நீர் வார்த்து தர வேண்டும். (**இமாம் கன்யாம் ப்ரஜாஜ ஹத்வ கர்மப்ய: ப்ரதி-பாதயாமி... வர:ப்ரதி பாதயிஷ்யே**) மணமகன் இரு கைகளாலும் அந்த பெண்ணை பெற்றுக் கொள்ளுகின்றபோது சொல்ல வேண்டிய மந்திரம்.

“வாழ்விற்காக ஸவித்ரு தேவதையாய் குழந்தைகள் பெற வேண்டும். அதற்காக அஸ்வினி தேவர்கள் போன்று இருகைகளால் பிடித்துக் கொள்ளுகின்றேன். (**தேவஸ்யத்வா ஸவிது ப்ரஸவே அச்வினோர் பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம்**) வருணராஜனின் வழிகாட்டுதல் படி நல்ல குழந்தைகளை அளிப்பாயாக. (**ப்ரதி-க்ருண் ணாமி ராஜாத் வா வருணோ நயது தேவி- தக்ஷிணே ப்ரஜாபதயே கன்யாம்**) தானம் அளிக்கப்பட்ட பெண்ணே! இனி நீ என்னுடையவள். நல்ல சந்ததிகளைத் திருப்பித் தருவதற்காக-தானமாய்க் கொடுத்த உன்னை- நான் முழு மனதோடு ஏற்றுக் கொள்கிறேன்” என்று சொல்ல வேண்டும்.

ஸர்வாலங்காரத்தோடு தானம் அளிக்க வேண்டும் என்று பார்த்தோம். பொன்னும் நகையும் போட முடியாதவர்கள் இந்த விஷயத்தில் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்வி எழலாம்.

இத்தனைப் பவுன் போட வேண்டும் என்கிற விஷயம் இந்த சுலோகத்தில் கிடை யாது. பொன் வைக்கிற இடத்தில் பூ வைக்கலாம் என் பதுபோல யதா சக்தி அலங்காரம் செய்து கன்னிகா தானம் செய்ய வேண்டும்.

அடுத்து இந்த தானத்திலே இன்னொரு சிறப்பும் இருக்கிறது. பொதுவாக தானம் செய்யும் போது சொல்லப்படும் மந்திரத்தின் நிறைவில் ஒரு பிரயோகம் உண்டு. “ந மம” என்கிற பிரயோகம் வரும். (இது இனி என்னுடையது அல்ல) தானம் கொடுத்தது இனி எனக்கு உரியது அல்ல. எனக்கும் நான் கொடுத்த இந்தப் பொருளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று பொருள்.

ஒரு பொருளை தானம் கொடுத்துவிட்டு திரும்ப அவர்களிடமிருந்து வாங்கிவிட்டால் அதைவிட பெரிய பாவம் உலகத்தில் எதுவுமே கிடையாது. ஒரு பசு மாட்டை தானம் தருகிறோம். அந்த பசுமாடானது தன்னை வாங்கியவரிடத்தில் போகாமல் முரண்டு பிடித்து உரியவன் வீட்டுக்கு வந்தாலும், அதனை உரியவர்கள் ஏற்றுக்கொள்வது கிடையாது.

இதற்கு அருமையான ஐதீகம் ஒன்று உண்டு. அது என்ன என்று அடுத்த இதழில் பார்ப்போம்.

அருளிச்செயல் தொடரும்...

ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

தொடர் கதை

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# ஸ்ரீ நரசிம்ம அவதாரம்



*சென்ற இதழ் தொடர்ச்சி...*


தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443


பிரகலாதனின் வார்த்தைகள் இரண்யகசிபுவை மேலும் கொதிப்படைய செய்தன. அவன் காலால் மிதிபட்ட பாம்பு சீறுவதுபோல் சீறத் தொடங்கினான். பிரகலாதனைக் கடுமையான வார்த்தைகளால் திட்டித் தீர்த்தான். பிறகு, "நீ ஆராதிக்கும் தெய்வமாகிய ஸ்ரீஹரி உன்னை எப்படிக் காப்பாற்றுகிறான் பார்ப்போம்" என்று மிகவும் கோபத்தோடு கையில் வாளை உருவிக் கொண்டான். சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்து ஆவேசத்தோடு அங்கிருந்தத் தூணை தன் கை முஷ்டியால் ஓங்கிக் குத்தினான். அப்பொழுது, வானமே இடிந்து விழுந்தது போல பயங்கரமான சப்தம் வெளிப்பட்டது. அந்தச் சப்தம் அண்ட சராசரங்களிலும் எதிரொலித்தது, "ஐயோ! உலகங்கள் யாவும் அழிந்து விடப் போகிறதோ" என்று எல்லோரும் அஞ்சினர், அசுர சேனாதிபதிகள் அச்சப்தத்தைக் கேட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஆனால், அது எங்கிருந்து வந்தது என்று அவர்களால் அறியமுடியவில்லை. இரண்ய கசிபுவும் சப்தம் வந்த திசையைக் கண்டறிய சுற்றும் முற்றும் பார்த்தவாறு இருந்தான். அப்பொழுது, மனிதனின் உடலும், சிங்கத்தின் முகமும் கொண்ட மஹா அற்புதமான நரசிம்ம உருவம் அந்தத் தூணை இரண் டாகப் பிளந்துக் கொண்டு வெளிவருவதைக் கண்ட இரண்யகசிபு திடுக்கிட்டான். "பாதி மனித உருவமும் பாதி சிங்க உருவமும் கொண்டு இருக்கின்ற இது எந்த வகை பிராணியோ? தெரியவில்லையே" என அசுரவேந்தன் அதிர்ந்து வியந்தான்.

ஸ்ரீநரசிம்மத்தின் வடிவம் மிகவும் பயங்கரமாக இருந்தது. ஒளிமயமாக பிடரிமயிர் பிரகாசிக்கவும், அதனால் நரசிம்மத்தின் முகம் மேலும் ஒளிர்ந்தது. அதன் பற்கள் நீண்டும் கூர்மையாகவும் இருந்தன. தூக்கிய காதுகள் காணப்பட்டன. மூக்கு துவாரங்களும், வாயும் குகை போன்றதோர் தோற்றம் தந்தன. அதன் கன்னங்கள் பிதுங்கி இருந்தன; அதன் உருவம் மிகவும் பெரியதாக வானளாவி நின்றது. பருத்த கழுத்தும்; அகன்ற மார்பும்; சந்திரகிரணங்களைப் போன்ற வெண்மையான உரோமங்களும் கொண்டதாக நரசிம்ம வடிவம் இருந்தது. நான்கு பக்கங்களும் பரவிய தோள்களும், சங்கு சக்கரம் கதை முதலான ஆயுதங்கள் அனைத்தும் தாங்கியதாக இவ் வுருவம் இருந்தது,

இரண்யகசிபு இந்த அதிசயமான உருவத்தைக் கண்டு, அச்சமடைந்தான். மேலும், தன்னைக் கொல்வதற்காக வேண்டியே மாயாவி விஷ்ணுவே இப்படியாக ஒரு புதிய வடிவத்தை எடுத்து வந்திருப்பதாக நினைத்துக் கொண்டான். இருப்பினும் அசுரனாகிய இரண்யகசிபு உடனே தன்னை சுதாகரித்துக் கொண்டு, கையில் கதாயுதத்தை எடுத்துக் கொண்டு சுழற்றியவாறு நரசிம்மத்தைத் தாக்க முற்பட்டான். அற்பமான விட்டில் பூச்சி விளக்கு தீயில் விழுந்து தன்னைத் தானே

அழித்துக் கொள்வதைப் போல, இரண்ய கசிபு தேவாதி தேவனான இறைவனை எதிர்த்து தாக்கி அவருடைய திவ்விய தேஜஸ்சில் கரைந்து காணாமல் போனான். அப்பொழுது ஸ்ரீநரஹரி, கருடன் பெரிய சர்ப்பத்தைப் பிடிப்பதைப் போன்று, அந்த அசுரனை பிடித்திழுத்துத் தூக்கி அழுத்தத் தொடங்கினார். அந்நேரம், நரசிம்மர் தன் பிடியை ஒரு நொடிப்பொழுது தளர்த்தினார். அத்தளர்வு தன் வீரத்தால் ஏற்பட்டது என இரண்யகசிபு நினைத்துக் கொண்டான். இருவருக்கும் கடுமையான யுத்தம் தொடங்கியது. இந்த யுத்தத்தை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த தேவர்கள் எல்லோரும் இது இரண்ய கசிபுக்கு நன்மையை உண்டாக்காது என நினைத்தனர். மேலும், இரண்யகசிபு வாள் கொண்டு ஸ்ரீஹரியைத் தாக்கத் தொடங்கினான். இம்முறையும் நரசிம்மர் அசுரனை பிடித்து அழுத்தத் தொடங்கினார். ஸ்ரீநரஹரி செய்த பெருத்த கர்ஜனையைக் கேட்டு அவ்வசுரன் அச்சத்தால் கண்களை மூடிக் கொண்டான். அப்பொழுது, ஸ்ரீநரஹரி அந்த அசுரனை பிடித்து இழுத்துக் கொண்டு வாயிற்படியின் அருகில் சென்றார். பிறகு அவனை அப்படியே



தூக்கித் தன் தொடையின் மேல் வைத்துக் கொண்டு, ஆயுதங்கள் ஏதுமின்றி தன் கை விரல் நகங்கள் மூலம் அவன் உடலை கிழித்தெறிந்தார்.

அப்பொழுது ஸ்ரீநரசிம்மரின் பிடரிமயிர் முழுவதும் குருதியால் நனைந்தது. பிறகு, நரஹரி அந்த அசுரனின் குடலை எடுத்து மாலையாகத் தன் கழுத்தில் போட்டுக் கொண்டார். பின்னர் அவன் இதயத்தைக் கீறி எடுத்து, அவன் உடலை அப்படியே தூக்கித் தூரமாக வீசி எறிந்தார். இதைக் கண்ட அசுர வீரர்கள் தம்தம் ஆயுதங்களுடன் ஸ்ரீஹரியை கொல்வதற்காக ஓடி வந்தனர். அவர்களை நரசிம்மர் அடித்தும் மிதித்தும் கிழித்தும் கொன்றார். எல்லா அசுரர்களையும் அழித்து ஒழித்தப் பின்னரும் உக்கிர சிம்மராகி கர்ஜித்தவாறு அரசவையில் சுற்றும் முற்றும் திரிந்து, பின் அரச சிம்மாசனத்தில் சென்று அமர்ந்து கொண்டார். அந்த உக்கிரமான தோற்றத்தைக் கண்டு அவர் அருகில் செல்ல யாரும் முன் வரவில்லை. அனைவருக்கும் துன்பத்தைக் கொடுத்து வந்த அசுரன் இரண்யகசிபு கொல்லப்பட்டதும் தேவர்கள் எல்லாரும் மிகவும் மகிழ்ந்து மலர்மாரி பொழிந்தனர். மேலும், துந்துபி முதலான தேவ வாத்தியங்கள் முழங்கினர். தேவலோகப் பெண்கள் நடனமாடினர். கந்தர்வர்கள் கானம் செய்தனர்.

பின்னர் பிரம்மா, சிவன், இந்திரன், ரிஷிகள், பித்ரு தேவதைகள், சித்தர்கள், வித்தியாதரர்கள், நாகர்கள், மனிதர்கள், பிரஜாபதிகள், கந்தர்வர்கள், சாரணர்கள், யக்ஷர்கள் முதலானவர்கள் வரிசையாக நின்றபடி, தம் தம் சக்திக்குத் தகுந்தாற்போல் தேவாதி தேவனை போற்றி துதித்தனர். ஆயினும், உக்கிரநரசிம்மரின் கோபம் குறையவில்லை. அந்த நிலையில் நரசிம்மரின் அருகில் வருவதற்கு எல்லோரும் அஞ்சினர். எனவே, அவர்கள் அனைவரும் மகாலட்சுமியிடம் சென்று, நரசிம்மரின் கோபாவேசத்தைத் தணிக்கும்படி வேண்டினர். மகாலட்சுமியும் இதுவரை கண்டிராத அந்தக் கோர உருவத்தின் அருகில் செல்ல அஞ்சினாள். மேலும், இது என்னால் முடியாத காரியம் என மறுத்தாள். அப்பொழுது பிரம்ம தேவர் பிரகலாதனிடம் “குழந்தாய்! ஸ்ரீநரசிம்மர் உன் தந்தையிடம் கோபம் கொண்டார். அதனால் நீ சென்று அந்த தேவாதி தேவனை சாந்தப்படுத்து, அது உன்னால் மட்டுமே முடியும் எனக் கேட்டுக் கொண்டார்.

உக்கிர நரசிம்மரின் உருவம் பிரம்மாதி தேவர்களுக்கே அச்சத்தை உண்டு பண்ணியது. ஆனால், மகாபக்

தனான பிரகலாதன் பயங்கரமான அந்த உருவத்தைக் கண்டும் அச்சம் கொள்ளவில்லை. பிரகலாதன் சிறிதும் அச்சமின்றி, அவர் அருகில் சென்று பாதங்களில் விழுந்து வணங்கினான். சிறுபாலகனான பிரகலாதன் தன்பாதங்களில் விழுந்து பக்தி பாவத்தோடு வணங்கியதைக் கண்டவுடன், ஸ்ரீநரசிம்மரின் இதயத்தில் கருணை கசியத் தொடங்கியது. கோபம் எல்லாம் ஒரு நொடியில் நொறுங்கிப் போனது.

உடனே, தேவாதி தேவனாகிய பகவான் பிரகலாதனை அன்போடும் கனிவோடும் அப்படியே தூக்கி நிறுத்தி, தன்னுடைய மலர்கரங்களைப் பிரகலாதனின் தலையின்மேல் வைத்து அவனை வாழ்த்தினார். தேவாதி தேவனின் மலர்க்கரங்கள் பட்ட உடன் பிரகலாதன் திவ்விய நிலையை அடைந்தான். அந்நிலையில் பேரானந்தம் பெருக்கெடுத்து ஓடியது. உள்ளம் தெளிவடைந்தது. சித்தம் முழுவதும் பகவானே நிறைந்திருந்தார். பக்தி பரவசத்தோடு இருக்கரங்களையும் கூப்பி மனம் முழுவதும் பகவானின் பாதக்கமலங்களின் மீது நிற்க, அவன் வாய் ஸ்ரீஹரி நாமத்தைத் தோத்திரம் செய்ய, அவன் பரமானந்தக் கடலில் மூழ்கினான்.

தேவாதி தேவனே! பிரமாதி தேவர்கள் எல்லோரும் உன்னை போற்றி தோத்திரம் செய்தும் சமாதானம் அடையாத நீங்கள், அசுர குலத்தில் தோன்றிய என்னால் மட்டும் உங்களை சமாதானம் செய்ய எவ்வாறு முடிந்தது? அதற்குக் காரணம் என்னவாக இருக்கமுடியும்? அது பக்தியோகம் மூலமாகவே உன்னை சமாதானப் படுத்தவும், தரிசிக்கவும் முடியும் என நான் நம்புகிறேன். கஜேந்திரனும் பக்தி மார்க்கத்தை கொண்டு தானே உங்களை தரிசிக்க முடிந்தது.

பகவானே! அநாகரீகமான அசுர குலத்தில் பிறந்த நான் எங்கே? என்மீது இவ்வளவு கருணையா! பிரம்ம ருத்திரர்களுக்கும், லட்சுமி தேவிக்கும் கூட கிடைக்காத உன் கருணை எனக்கு கிடைத்தது எப்படி? எந்நாளும் உங்கள் மலர்க்கரங்களை அவர்கள் தலைமீது வைத்து ஆசீர்வதிக்காத நீங்கள் என் தலைமீது வைத்து ஆசீர்வதித்தீர்களே. பகவானே நான் போகங்களில் மூழ்காமல் சம்சாரக் கடலில் அழுந்திவிடாமல் காத்து தக்க சமயத்தில் உன்னுடைய பரம பக்தனான ஸ்ரீநாரத மகரிஷி என்னை சீடனாக ஏற்றுக் கொண்டு திவ்விய நிலையை அடையும் வழிவகைகளை எனக்கு உபதேசித்தார். அவரைத் தரிசிப்பதே என் முதல் கடமையாகும். தேவாதி தேவனே! உனக்கு என் வணக்கங்கள். துதிப்பதும், கர்ம பலன்களை உன்னிடம் சமர்ப்பிப்பதும், உன்னை அர்ச்சிப்பதும், உனக்குச் சேவை செய்வதும், உன்பாத கமலங்களை மனதில் நிறுத்துவதும், உன்னுடைய பராக்கிரமங்களையும் பெருமைகளையும் மகிமைகளையும் கேட்டுக் கொண்டிருப்பதும் போன்ற ஆறுவகையான பக்தி நிலைகளைச் செய்யாமல் மேலான உன் அருளை எவரால் பெற முடியும்? இவ்வாறு பக்தபிரகலாதன் பக்தி சிரத்தையோடு ஸ்ரீநரசிம்மரைப் போற்றி புகழ்ந்தான். எனவேதான் பக்த பிரகலாதன் தேவாதி தேவனுக்கு மிகவும் நெருக்கமானவனானான்.

பாகவத கதை சாகரம் தொடரும்...



## ஸ்ரீமத் பாகவதம் வினாக்கள்

திருமதி என். ஹேமா,
திருப்பதி, 77020 15076

1. ஜெய, விஜயருக்கு பிரம்மனின் மானஸ புத்திரர்கள் என்னவென்று சாபம் கொடுத்தனர்?
2. ஜகத்ரக்ஷகனான ஸ்ரீஹரியின் பால லீலைகள் எந்த அத்தியாத்தில் உள்ளன?
3. கஜேந்திரனின் பூர்வ ஜென்மத்தின் பெயர் என்ன?
4. இராமாயணம் மற்றும் பாகவதத்தில் ஸ்ரீஹரி யார் யாரை சம்ஹாரம் செய்தார்?
5. ருக்மிணி தாயார் யாருடைய அவதாரம்?
6. இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் மன்வந்தரத்தின் பெயர் என்ன?
7. ஸ்ரீமஹாலக்ஷ்மி எந்த வடிவத்தில் எந்தெந்த குணத்திற்கு அபிமான தேவதை?
8. வால்மீகி மகரிஷியின் சீடர்கள் யார்?
9. ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்கு பிரியமான விரதம் எது?
10. ஏழு லோகத்தின் பெயர்கள் யாது?

விடைகளுக்கு 73ம் பக்கம் பார்க்க...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்


உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

பெரியபெருமாள் வாழித்திருநாமம் தொடர்ச்சி...

(செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்போன்) – செய்ய – நேர்மையான, இடைத் தாய்மகள் – இடையர் குலத்தில் ஸ்ரீகும்பனுக்கு மகளாகப் பிறந்த நப்பின்னை. இடையரால் பெற்று வளர்க் கப்பட்ட அன்பிற்குரிய தேவி நப்பின்னை என்னும் நீளா தேவி. இவளுக்கு மணவாளர் நம்பெருமாள். அவளால் சேவிக்கப்படுபவன் நம்பெருமாள். நம்மாழ்வார் அருளியபடியே ''அன்று உருவு ஏழும் தழுவி நீ கொண்ட ஆய்மகள் அன்பன்'' என்று கண்ணனாய் ஏழு எருது களை அடக்கி தாய்மகளான நப்பின்னைப் பிராட்டிக்கு அன்பன் என்று அவளால் தொழப்பட்டவன் இன்று அரங்கனாய் இருக்கிறான் என்றபடி. பின்னும் ''ஆயர் பின்னை தோள் மணம் புணர்ந்து'' என்கிற படியே கோபாலரான ஸ்ரீகும்பனுடைய மக ளான நப்பின்னைப்பிராட்டியினுடைய தோளோடே கலந்தவன் அரங்கன் என்று சுவைபட திருமழிசையாழ்வார் (திருச். வி.55) அநுபவிப்பர். பின்னைக்கு இனிய பெருமாள் அரங்கர் என்றும் திருவரங் கத்து மாலையில் (21) அருளியது காண்க.


(இருவிசும்பில் வீற்றிருக்கும் இமையவர்கோன்) ''அமரர்க்கும் பிரானா ரைக் கண்டது தென்னரங்கத்தே'' என்று திருமங்கையாழ்வார் அருளியதற்கு ஏற்ப நித்ய ஸூரிகளுக்கும் தலைவ னானவன் அரங்கன் என்கிறார். மேலும் பிறவியின் தொடுதலாகிற வாசனை இல்லாத நித்யஸூரிகளுக்கு தலைவனான அரங்கன் பள்ளி கொண்ட இடம் தென்னரங்கம் என்பதற்குச்சேர ''இமையோர்கள் தாதைக்கு இடம்'' என்று பாடுகிறார் திருமங்கையாழ்வார். ''அமரரேறே'' என்று தொண்டரடிப்பொடிகளும், ''விண்ணோர் முதல் என்னும்'' என்று நம்மாழ்வாரும், ''விண்ணவர் கோன்'' என்று திருப்பாணாழ்வாரும் அனுபவித்தனர்.

(இடர்கடியப் பாற்கடலை எய்தினான்) எம்பெருமான் எழுந்தரு ளிய நிலைகளில் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட நிலை வியூகம் எனப் படும். வியூகமாவது படைப்பு, காப்பு, அழிவு முதலானவற்றுக்குக் கடவ னாய், ஸம்ஸாரிகளின் இடர்களைப் போக்கி விருப்பத்தைக் கொடுப்ப வனாய் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட நிலை. பாற்கடல்போலே வியூகம் என்பர் பிள்ளைலோகாசார்யர். ''ஆயிரம் பெயரால் அமரர் சென்றி றைஞ்ச அறிதுயில் அலைகடல் நடுவே ஆயிரம் சுடர்வாய் அரவணைத் துயின்றான் அரங்கமாநகருளானே'' என்று திருமங்கையாழ்வார் அருளியபடியே, தேவர்கள் எல்லாரும் தங்களுக்கு ஏற்பட்ட இடரைப் போக்க அவர்கள் கூக்குரலைக்கேட்க பாற்கடலில் பள்ளி கொண்டவன் இன்று அரங்கத்தில் துயிலுகிறான் என்று உரைப்பர். பெரியாழ்வாரும்,



*''பையரவினணைப் பாற்கடலுள் பள்ளி கொள்கின்ற பரம் மூர்த்தி''* என்று கூறுவர். இதற்கு உரையிட்ட மணவாள மாமுனிகள், திருப்பாற்கடலிலே தன் தொடுதலாலே விரிந்ததான பணங்களையுடையவனாய், மென்மை, குளிர்த்தி, நாற்றங்களைத் தன்மையாகவுடைய திருவ னந்தாழ்வானாகிற படுக்கையின் மேலே ஸம்ஸாரிகளான ஆத்மாக்களை உய்விக்கும் பொருட்டு பல உபாயங் களை மனத்திலே சிந்தித்துக்கொண்டு படுத்திருப்பதாக அநுபவிப்பர். நம்மாழ்வாரும் *''கடலிடம் கொண்ட கடல் வண்ணா''* என்று அநுபவிப்பர். திருப்பாற்கடலானது முப்பத்திரண்டு லக்ஷம் யோசனையுள்ளது. அதன் நடுவே உள்ள திருவனந்தாழ்வானுடைய உடலானது மூன்று லக்ஷம் யோசனை, அவன் மேலே யோக நித்ரை செய்யும் திருவரங்கனின் திருமேனியானது இரண்டரை லக்ஷம் யோசனை (யோசனை என்பது 7, 8 மைல்) என்று அஷ்டப்ரபந்த நூலில் திருவரங்கத்து மாலை கூறும்.

(அந்தர்யாமித்துவமும் ஆயினான்) – அந்தர்யா மித்வம் – உள்ளே உறையும் தன்மை. எம்பெருமானின் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகிய ஐந்து நிலைகளில் அந்தர்யாமி என்பது ஒவ்வொரு வஸ்துவிலும் எம்பெருமான் உள்ளே உறையும் நிலை. *''பூகத ஜலம் போலே அந்தர்யாமித்வம்''* என்பர் பிள்ளை லோகாசார்யர். பிரம்மாண்ட புராணத்தில் (5வது அத்யா. 4–5 சுலோகம்) சொல்லியபடியே பெரியபெருமாள் தெய்வீகத்தன்மை கொண்டு திருமேனியுடன் எங்கும் வியாபித்துள்ளான் என்றும், எங்கும் பரந்துள்ள எம்பெருமான் அடியார்கள் பொருட்டு ஆசை கொண்டவ னாக அர்ச்சாமூர்த்தியாக திருவரங்கத்தில் எழுந்தருளி யிருக்கிறான் என்றதும் காண்க, பூதத்தாழ்வார் நல்ல வர்கள் உள்ளத்தில் இருக்கும் எம்பெருமான்களைச் சொல்லும் வரிசையில் "தலை அரங்கம்" என்று திருப்பதி களில் ப்ரதானமான கோயில் என்று உரைப்பர். தொண்டரடிப் பொடியாழ்வாரும் தம் நெஞ்சைப்பார்த்து *''மாசற் றார் மனத்துளானை வணங்கி நாம் இருப்பதல்லால் பேசத் தானாவதுண்டோ பேதை நெஞ்சே நீ சொல்லாய்''* என்று மாசற்ற மனத்தில் அரங்கன் இருப்பைத் தெரிவிக் கிறார். திருப்பாணாழ்வாரும் *''என்னைத்தன் வாரமாக்கி வைத் தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான்''* என்று அரங்கன் அந்தர்யாமியாய் இருப்பதை அநுபவிக் கிறார். நம்மாழ் வாரும் தாம் அருளிய திருவாய்மொழியில், *''மூவுல காளியே என்னும்'', கடிகமழ் கன்றைச் சடையனே''*



என் னும், *''நான்முகக்கடவுளே என்னும்''* என்று இந்திரன், சிவன், நான்முகன் ஆகியோர்க்கு அந்தர்யாமியாய் இருக்கிறான் திருவரங்கன் என்றதும் காணலாம்.

(அரிய தயரதன் மகனாய் அவதரித்தான்) – அருமையான தசரதனுக்கு மகனாகப் பிறந்தான். *''மயா ராகவேரூ பேண''* என்று ஸ்ரீரங்க மஹாத்மியத்திலும் (அத்யாய. 8–30 சுலோகம்) எம்பெருமான் தான் இராம னாக அவதரிப்பேன் என்றது காண்க. தொண்டரடிப் பொடியாழ்வாரும் தாம் அருளிய திருப்பள்ளியெழுச் சியில் *''அயோத்தி எம் அரசே அரங்கத்தம்மா''* என்கிறார். அதாவது சக்கரவர்த்தி திருமகனாய் அவதரித்தவன் இந்த அரங்கனே என்றபடி. இராமனாய் அவதரித்து இராவணனைக் கொன்று தேவர்கள் ரிஷிகள் முதலா னோர் கார்யம் நிறைவேற்றிய பின்பும், அந்த அவதாரத் துக்குப் பிற்பட்டவர்களுக்கும் உதவுவதற்காக திருவரங் கத்தில் படுத்துள்ளான் என்பர். பெரியாழ்வாரும் திருவரங்கப்பதிகத்தை (4–9) அநுபவிக்கும்போது *''மூவுருவில் இராமனாய்''* என்று அருளியதற்கு ஏற்ப, இராவணன் பொருட்டு தசர தாத்மஜ ராமாவதாரம் செய்தான் என்று மணவாள மாமுனிகள் உரையிடுவர். நம்மாழ்வாரும் நாயகி பாவத்தில் தாய்ப் பாசுரமாகச் சொல்லும்போது அரங்கனை "காகுத்தா" என்று சொல் லிக் கொண்டிருப்பதைக் காணலாம். பராசர பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் (70) *''ஹே நாத மநுஜஸமயம் க்ருத்வா பத்மயா லஹ''* என்று அரங்கனே இராமனாய் அவதரித்தான் என்றது காண்க.

(பெருகிவரும் பொன்னி நடுப்பின் துயின் றான்) – பொன்னி என்பது காவிரி நதியின் மறு பெயராகும். மிகப் பழமையான காவிரி பாய்ந்து வளம் சிறக்கும் நாடுகளிலெல்லாம் பொன் கொழிக்கும். இது பற்றியே காவிரிக்குப் பொன்னி என்ற பெயரும் உண்டு. காவிரித் தாயும் அரங்கன் வருவதற்கு முன்னமேயே அவனுக்கு தன்னையே ஒரு மாலைபோல் இட்டு ஒரு மணல் திட்டை ஏற்படுத்தியவள். இதன் நடுவில் அரங்கன் துயின்ற வரலாறு பின்வருமாறு:

விந்திய மலையின் அடிவாரத்தில் எல்லா நதிகளும் சேருகின்ற இடம் ஒன்று முன்பு இருந்தது. விச்வாவசு என்ற கந்தர்வன் ஒரு நாள் வந்தான். அவன் வந்தவுடன் தென் திசையைப்பார்த்துக் கைகூப்பி அத்திசையை நோக்கிச்சென்றான். அப்போது அந்த நதிகளுக்கு இடையே விவாதம் வந்தது. ஒவ்வொரு நதியும் தனக்கே அந்த கந்தர்வன் வணக்கம் செலுத்தினான் என்று போட்டியிட்டன. தெற்கு நோக்கிச் சென்ற அந்த கந்தர்வன் தெற்கில் உள்ள கடல் வரை சென்றான். அங்கு பற்பநாபன் தனது உறக்கம் நீங்கி எழுந்ததைக் கண்டான். அப்போது உத்தராயண காலம் தொடங்கியது. கந்தர்வன் வடக்கு நோக்கிச் சென்றான். அங்கு சென்றபோது மீண்டும் அந்த நதிகளைக்கண்டு வணங்கினான். அந்த நதிகள் நீர் யாரை வணங்கினீர்? என்று கேட்டன.

அதற்கு அவன் "உங்களில் உயர்ந்தவர் யாரோ அவரை வணங்கினேன்" என்றான். உடனே அந்த நதிகளுக்கு நடுவில் யார் உயர்ந்தவர் என்ற போட்டி ஏற்பட்டது. ஆனால் சில நிமிடங்களில் அந்த நதிகள் தாங்கள் உயர்ந்தவர்கள் அல்லர் என்று முடிவுக்கு வந்து அமைதியாயின. ஆனால், கங்கையும் காவிரியும் தங்களுக்குள் தானே உயர்ந்தவள் என்று பல காரணங்களைக் காட்டியபடி இருந்தன. அந்த இரு நதிகளும் நான்முகனிடம் சென்று கேட்டன. அவரும் "கங்கையே உயர்ந்தவள் அதில் எந்த சந்தேகமும் இல்லை" என்று சொன்னார். இதைக்கேட்ட காவிரி துக்கப்பட்டு நான்முகனைக் குறித்து, தான் கங்கைக்குச் சமமாக ஆக வேண்டும் என்று தவம் இருந்தாள். நான்முகனும் "கங்கைக்கு நிகராக காவிரி இருப்பாள்" என்று வரம் தந்தான், ஆனால் கங்கையைக்காட்டிலும் காவிரி உயர்ந்தவள் என்று வரம் தர மறுத்தான். அப்போது காவிரி ஸ்ரீரங்கநாதன் விக்ரகத்தை திருச்சேறையில் பிரதிஷ்டை செய்தாள். நீண்ட காலம் வழிபட்டதன் பொருட்டு அரங்கன் அவளை வரம் கேட்கச் சொன்னார். காவிரியும் கங்கையைக்காட்டிலும் உயர்ந்தவளாக விரும்பினாள். உடனே எம்பெருமான் தன் ஸம்பந்தம் மூலமாக கங்கை அடைந்த உயர்வை யாரும் அடைய முடியாது என்றும், ஆனால் தன் கருணை மூலமாக காவிரி கங்கையைக் காட்டிலும் மேன்மை அடைவாள் என்றான். அரங்கன் காவிரியை பார்த்து "ஸ்ரீரங்க விமானம் உன் நடுவே வந்து அமையும் அங்கு வந்து நான் வசிப்பேன்" என்று கூறினார். மேலும், "நான் உன் நடுவில் வசித்து வருவதால் நீ எப்போதும் என் ஸம்பந்தம் பெற்று கங்கையைக்காட்டிலும் உயர்ந்தவளாவாய்'' என்றான் (பிரம்மாண்ட புராணம் ஸ்ரீரங்க மஹா.அத்யா.9,22–38 சுலோகங்கள்).

இது பற்றியே தொண்டரடிப்பொடியாழ்வாரும் தாம் அருளிய திருமாலை என்னும் பிரபந்தத்தில் *''கங்கையில் புனிதமாய காவிரி நடுவுபாட்டு''* என்றும், *''வெள்ளநீர் பரந்து பாயும் விரிபொழில் அரங்கம் தன்னுள் கள்வனார் கிடந்த வாறும்''* என்றும் பாடினார். மேலும் குலசேகராழ்வாரும் *''திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி திரைக் கையால் அடிவருட''* என்று அருளியதற்கு ஏற்ப திருவரங்க மாநகரத்திலே தெளிந்த நீரையுடைய காவிரி திரைகளாகிற கைகளாலே அரங்கன் திருவடிகளை வருட பள்ளி கொண்டுள்ளான் என்பர். இவ்வாழ்வாரே அரங்கன் காவிரியின் நடுவே பள்ளிகொண்டதை *''திடர் விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டு''* என்கிறார். அதாவது திட்டுக்கள் விளங்கும்படியான கரையையுடைய காவிரியின் நடுவே எம்பெருமான் பள்ளிகொண்டபடி திருமழிசையாழ்வாரும்" பரந்து பொன் நிரந்து நுந்தி வந்தலைக்கும் வார்புனல்" என்பதற்குச்சேர காவிரியானவள் அரங்கனிடம் தனக்குள்ள பெரிய அபிமானத்தாலே இருபுறமும் சுற்றிலும் பரந்து நின்று என்றும் ஊற்று மாறாமல் பெருகி வருகிறாள் என்று அநுபவிப்பர் பெரியவாச்சான்பிள்ளை. மேலும், பெருகி வரும் காவிரியைப் பற்றிச் சொல்லும்போது இவ்வாழ்வாரே "குலைத் தலைத்து இறுத்தெறிந்த குங்குமக் கழம்பினோடு அலைத் தொழுகு காவிரி" என்கிறார். அதாவது குங்குமப் படர் கொடியை நீர் வந்து குலைத்துச் சுற்றும் அலைத்து முறித் தெறித்த குங்குமத் துகள்களைக் குழம்பாக்கி அத்தோடே கூட அலைத்துக்கொண்டு பெருகிவருகிறாள் என்றபடி. இவ்வாறு மற்ற ஆழ்வார்களும் தாங்கள் அருளிய பிரபந்தங்களில் பொன்னி என்னும் காவிரி பெருகிவரும் தன்மையைப் போற்றியுள்ளனர்.

வாழித்திருநாமம் வளரும்...



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## பாடம்-2

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ते | = | அவர்கள் | कदा? | = | எப்பொழுது | सन्ति | = | உள்ளனர் |
| यूयं | = | நீங்கள் | तदा | = | அப்பொழுது | स्थ | = | நீங்கள் உள்ளீர் |
| वयं | = | நாங்கள் | इदानीं | = | இப்பொழது | स्मः | = | உள்ளோம் |

### வினாக்கள்

१. त्वं तदा तत्रासि
२. ते सन्ति
३. यूयं स्थ ४.वयं स्मः
५. ते इदानीं कुत्र सन्ति?
६. यूयं कदा अत्र स्थ?
७. वयं तदा अत्र स्मः
८. सः इदानीं कुत्रास्ति?
९. अहं इदानीं अत्रास्मि
१०. यूयं कुत्र स्थ?

1. நான் இப்பொழுது அங்கு உள்ளேன்.
2. நீங்கள் இப்பொழுது அங்கு உள்ளீர்.
3. நாம் இப்பொழுது எங்கு உள்ளோம்?
4. அவர்கள் இப்பொழுது எங்கு உள்ளனர்?
5. நீங்கள் இப்பொழுது அங்கு உள்ளீர்.
6. நாங்கள் அப்பொழுது இருந்தோம்.
7. அவர் உள்ளார்.
8. தாங்கள் உள்ளீர்.
9. நாம் உள்ளோம்.
10. அவர்கள் எங்கு உள்ளனர்?

### விடைகள்

1. நீ அப்பொழுது அங்கே இருந்தாய்.
2. அவர்கள் உள்ளனர்.
3. நீங்கள் உள்ளீர்.
4. நாங்கள் உள்ளோம்.
5. அவர்கள் இப்பொழுது எங்கு உள்ளனர்?
6. நீங்கள் எப்பொழுதும் இங்கு உள்ளீர்.
7. நாங்கள் அப்பொழுது இங்கே உள்ளோம்.
8. அவன் இப்பொழுது எங்கே உள்ளான்?
9. நான் இப்பொழுது இங்கு உள்ளேன்.
10. நீங்கள் எங்கு உள்ளீர்?

१. अहं इदानीं तत्रास्मि
२. यूयं इदानीं तत्र स्थ।
३. वयं तदा कुत्र स्मः?
४. ते कदा तत्र सन्ति?
५. यूयं कदा तत्र स्थ?
६. वयं तदा स्मः।
७. ते सन्ति।
८. यूयं स्थ।
९. वयं स्मः।
१०. ते कुत्र सन्ति?

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா



பகவத் கீதை-இளைய சமுதாயம்

# உயர்ந்த லட்சயம் உன்னத சுவை

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ், 6304428489

சுவை என்பது நாக்கினால் பெறக்கூடியது அல்ல. புத்தியினால் காண வேண்டும். ஒரு முறை வெற்றியை சுவைத்தால் மீண்டும் மீண்டும் வெற்றியடைதல் வேண்டும் என எண்ணல் வேண்டும். எனவே வெற்றியை சுவைப்பது நாக்கினால் அல்ல அல்லவா? அது புத்தியினால் மட்டுமேயாகும்.

இவ்வாறாக, சுவை கிடைக்காதபோது மானிடர் தம் செயல்களிலும் முன்னோக்கிச் செல்வதில்லை. இது உணவின் மூலமாக அனைவரும் அறிந்த அனுபவமாகும். சுவையான உணவு இல்லையெனில் மனிதனுக்கு உணவு உண்ணல் வேண்டும் எனும் எண்ணம் உண்டாவதில்லை.

எனவே, தான் செய்யும் பணியின் மீதும், வெற்றியின் மூலம் பெறக்கூடிய அற்புதமான வளர்ச்சியின் மீதும் மனிதனுக்கு சுவையிருத்தல் வேண்டும். இதுவே மானிடருக்கு தேவையான முக்கிய தகவலாகும்.

சுவைகளில் அற்பமான சுவைகள், தனித்துவமான சுவைகள் என உள்ளன. உதாரணத்திற்கு ஒரு பெரிய திருமண விருந்திற்குச் செல்லும்போது, சாலையோர கடைகளில் விற்கப்படும் மிளகாய் பஜ்ஜியை உண்பது அற்பமான சுவையில் சம்மந்தப்பட்டது.

மிக அற்புதமான விருந்திற்குச் செல்லும் வழியில் சாலையோரத்தில் விற்கப்படும் மிளகாய் பஜ்ஜியை திண்பது ஒரு புத்திசாலியான செயல் என்று எண்ணல் வேண்டாம். முதலில் மனிதன் அற்பமான சுவைகள், தனித்துவமான சுவைகள் குறித்து தெரிந்து கொள்ளல் வேண்டும். அதே போன்று மனிதர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் லட்சயங்களில் அற்பமான லட்சயங்களுக்கும், உன்னதமான லட்சயங்களுக்கும் இடையில் எப்பொழுதும் போட்டி நடைபெற்று கொண்டேதான் இருக்கும். யாரொருவர் இப்போட்டியில் தனித்துவமான



சுவையின் பாதையையும், உன்னதமான லட்சயப் பாதையையும் கடைபிடித்து செல்கின்றனரோ அவர்களே வாழ்க்கையில் வெற்றியடைவர். அவர்களே தம் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமையை சேர்ப்பர். இதனை சாதிப்பதற்கான தகவலை பகவத் கீதை (2:59) அனைவருக்கும் சிறப்பான செய்தியை அளிக்கின்றது.

"புலன்களின் மூலம் போகப் பொருட்களை ஏற்றுக் கொள்ளாத மனிதனுடைய புலன் நுகர் பொருட்கள் மட்டுமே விலகுகின்றன. ஆனால், அவற்றில் தங்கியுள்ள பற்று விலகுவதில்லை. இந்த ஸ்திதப்ரக்ஞனுக்கோ பரமாத்மாவை தரிசித்தப் பிறகு அப்பற்றும் விலகி விடுகிறது".

திருமண விருந்திற்குச் செல்பவனுக்கு சாலையோர கடைகளில் உள்ள மிளகாய் பஜ்ஜியின் சுவையில், மனதும் நாக்கும் கடையின் பக்கம் இழுத்தாலும், அவன் புத்தியின் மூலமாக சிறப்பான கல்யாண விருந்தின் சுவையினை நினைவில் கொண்டு சாலையோரக் கடைகளில் உண்பதை தவிர்த்தல் வேண்டும். பக்தியுள்ளவன் இவ்வாறாகவே செய்வான்.

இதனையே பகவத்கீதையில் *''பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே''* என்ற உயர்வான தகவல்களின் வாயிலாக அற்பமானவற்றிலிருந்து விடுபட வேண்டும் என்பது பொருள். அதுபோன்றே வாழ்க்கையில் மேன்மையை அளிக்கக்கூடிய தேர்விற்குச் செல்லும் மாணவர் வீட்டில் எவ்வளவு பெரிய பண்டிகை நடைபெற்றாலும் அதனை விடுத்து உன்னதமான லட்சயத்தின் வழியிலேயே செல்வான்.

யாரொருவர் வாழ்க்கையில் உயர்வான லட்சயத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனரோ, யாரொருவருக்கு உன்னதமான சுவையின் மீது ஆர்வம் இருக்கின்றதோ அவர்கள் அற்பமானவற்றை விடுத்து முன்னோக்கிச் செல்வர். ஒலிம்பிக்கில், தங்கப் பதக்கத்தைப் பெற வேண்டும் எனும் லட்சயம் கொண்டவர் அனைத்து போகங்களையும் விடுத்து, தினமும் குறைந்தது 10 மணி நேரம் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர். நோபல் பரிசு பெற எண்ணுபவர் பல ஆண்டுகள் ஆய்வுக் கூடங்களிலேயே மூழ்கியிருப்பர். அப்பொழுது தான் அற்புதமான வெற்றிகளையும் சாதிப்பர்.

எனவே, அற்பமான சுவைகளில், அற்பமான லட்சயங்களில் வீழ்ந்து விடுபவர்களிடம் உன்னதமான சுவை, உன்னதமான லட்சயங்கள் இல்லை என்றே பொருள் கொள்ளலாம். பெரியோர்களின் வாயிலாக உன்னதமான லட்சயங்களையும், உன்னதமான சுவைகளையும் ஏற்படுத்திக் கொள்ளும் இளைஞர்கள் தற்காலிகமான லோபத்தையும், கவர்ச்சிகளையும் விடுத்து வாழ்க்கையில் மிகவும் உன்னதமான வெற்றியை பெறுவர். விளையாட வேண்டிய வயதில் துருவன் தவத்தை புரிந்து துருவ மண்டலத்தையே பெற்றான்.

இதனை வழிகாட்டுதலாக பின்பற்றுதல் வேண்டும். அற்பமானவற்றின்பின் மனது சென்றாலும் புத்தியின் வாயிலாக உன்னதமானவற்றின் வழியில் செல்வதே இளைஞர்களின் கடமையாகும்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 52க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ன | ந் | த | ன் | ச | ர | 2 அ | ர் | ஜு | ன | ன் |
| ர | 3 ரி | ர் | ழி | நி | 4 வ | தை | கா | | 5 ம | ழை | த |
| ச | க் | ஜீ | க | க் | ச | ந் | ர | ம் | ர | 6 க | 7 ம |
| ம | மா | 8 ய | ர் | 9 அ | ந் | 10 த | ம் | 11 ஞா | | ரு | ன் |
| ர | கா | ஜ் | 12 மா | தி | த | 13 கா | 14 மௌ | ன | ம் | ட | 15 ம |
| ம் | ங் | ஞு | 16 நீ | 17 கு | ரு | ம | ல் | 18 மு | ன | ன் | ந் |
| ர | 19 க | ம் | தி | 20 ஆ | து | தே | யி | ய | 21 ம | | தி |
| கா | 22 பி | ரு | கு | ன் | 23 சூ | னு | 24 வெ | ற் | றி | | ர |
| ங் | | | 25 ஹோ | ம | ம் | க | ங் | 26 சி | 27 சா | | ம் |
| 28 ஓ | ர் | ச | யா | 29 வி | | | | ன் | ம | 30 ய | ல |
| 31 சூ | ரி | ய | ன் | த் | ய் | 32 தா | 33 ஒ | ளி | | | 34 கா |
| | ன் | ம | 35 ரா | தை | 36 நெ | ன் | ர | தி | ந் | 37 இ | |




# சித்தரத்தை

சித்தரத்தை கொடி சர்வசாதாரணமாக ஒரு மீட்டர் வரை வளரக்கூடிய ஔசத குணம் கொண்ட மூலிகை யாகும். இம்மூலிகை பலநோய்களைக் குணமாக்கும் ஒப்பற்ற மருத்துவ குணம் சார்ந்தது எனச் சொல்லலாம்.

*''பலமாரரோக்ய மாயுச்ச பிராநச்சரக்நௌ பிரதிஸ்டித:'*

என்று ஆயுர்வேதம் போற்றுகின்றது. பலம், ஆரோக்கியம், ஆயுள், உயிர் முதலான மிக முக்கியமான இவையெல்லாம் அக்நி வழியே நிர்மானிக்கப்படுகின்றன என்பது இதனு டைய கருத்தாகும். உடலில் வெப்பம் குறைந்தால் இவற் றின் செயல்பாடும் குறைந்து விடும். எனவே உடலில் வெப் பத்தைக் காப்பாற்றுவதற்கு, செரிமானம் மேம்படுவதற்கும், உடல் பலத்திற்கும் அருமருந்தாக இந்த மூலிகை இருப்பதினாலே இதனை அநல, வக்நி சஞ்சகா என வடமொழிப் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

ஆங்கிலத்தில் சிலோன் லெட்வார்ட் என்றும், இந்தி யில் சீத என்றும் சொல்லப்படும் ப்ளம்பாஜீநைசி என்ற தாவர குடும்பத்தைச் சார்ந்த இந்த கொடியின் அறிவியல் பெயர் ப்ளம்பாகோ ஜைலாநிக. காய்ந்த சித்தரத்தை வேர்கள் வருடம் முழுவதும் மூலிகைக் கடைகளிலும் நாட்டு வைத்திய கிடங்குகளிலும் கிடைக்கும்.

இயற்கை நமக்கு அளித்த கொடையான சித்தரத்தை நமது வாழ்வில் ஏற்படும் பல்வேறு நோய்களுக்கு எப்படி

தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
முனைவர் பா. தனஞ்செழியன், 9003500499

பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை இனி தெரிந்துக் கொள்ளலாம்.

**அதிகமான எடையைக் குறைப்பதற்கு :**

சித்தரத்தை சூர்ணம் வருத்து செய்த சூர்ணம், பெருங்காயம் நெய்யோடு வருத்து செய்த சூர்ணம், ஒவ்வொன்றும் 10 கிராம், திரிபலசூர்ணம் 30 கிராம், திரிகடு சூர்ணம் (சுக்கு, திப்பிலி, மிளகு கலந்த சூர்ணம்) 30 கிராம் இவற்றை மூன்றையும் கலந்து நாள்தோறும் காலை இரவு உணவுக்கு அரைமணி நேரத்திற்கு முன்பு வேளைக்கு ஒரு கிராம் பொடியைத் தேனோடு கலந்து சில விதிமுறைகளையும் கடை பிடித்து வந்தால் எடைக் குறையும். கொழுப்போடு சேர்ந்த தொந்தியும் குறையும்.

**பசி எடுப்பதற்கு :**

நாள்தோறும் இருவேளை 100.மி.லி. மோரில் ஒரு கிராம் சித்தரத்தை பொடியை கலந்து பருகிவந்தால்

# கீதையின் பொன் மொழிகள்



**தொகுப்பு : டாக்டர் எஸ்.எல். ஸ்ரீநிவாசன், சத்ய மங்கலம்**

- இலை, பூ, பழம், தண்ணீர் – ஏதோவொன்றை உண்மையான பக்தியோடு கொடு; கண்ணன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வான்.
- பகவானின் கதைகளை உள்ளன்போடு உற்றார் உறவினரிடம் சொல்லி மகிழ்.
- ப்ரபஞ்சம் முழுவதும் கண்ணனின் உடைமை என்று உணர்க.
- விச்வரூப தரிசனத்தை வரைபடத்தில் பார்த்து மனத்தில் நிறுத்த முயல்க.
- நாம் ஒவ்வொருவரும் பரம்பொருளின் திருமேனியின் ஒரு சிறுபகுதி என்ற பெருமையை உணர்.
- முதலும் நடுவும் முடிவுமற்ற கண்ணனின் கையில் நாம் ஒரு கருவி என்றறிந்து பொறுப்போடு நட.
- பரம்பொருளைத் தாயும் தந்தையுமாக மதித்து வணங்கு.
- கண்ணனை அறியவும், காணவும், அடையவும் பக்தி ஒன்றே வழி என்று உறுதி கொள்.
- பகவானின் மங்களமான குணங்களை விழிக்கும்போதும், தூங்கப்போகும் போதும் நினை.
- எந்த ஜீவராசிகளிடமும் பகைக்காமல் நட்பையும் கருணையையும் காட்டு.
- சித் (அறிவுடைய ஆத்மா) அசித் (அறிவற்ற உடல்) ஈச்வரன் (பரம்பொருள்) ஆகிய மூன்று தத்வங்களை உணர்.
- பகவத் பக்தர்களை மதி; டாம்பீகம் காட்டாதே; அஹிம்சையைப் பழகு; நேர்மையோடு இரு; ஆசார்யனை வணங்கு.

செரிமான பிரச்சனைகள் தீர்ந்து நன்றாக பசியெடுக்க ஆரம்பிக்கும்.

**வெண் தழும்புகள் குறைவதற்கு :**

சித்தரத்தை பொடி, கடுக்காய் பொடி இரண்டும் சரிசமமாக கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். தகுந்த பொடியோடு தகுந்த எலுமிச்சை சாற்றினை கலந்து பசையாக்கி வெண் தழும்புகள் மீது பூசுதல் வேண்டும். இப்படி பூசும் போது தோலுக்கு வண்ணத்தைக் கொடுக்கும். மெலானின் எனும் சுரப்பி சுரந்து வெண் தழும்புகள் மாயமாகும்.

**பல்சொத்தைத் தீர்வதற்கு :**

சிறிது சித்தரத்தை பொடியை சிறிது நீரோடு கலந்து பசையாக்கி சொத்தைப் பல் உள்ள இடத்தில் வைத்து அடைத்தால் உடனே வலி, எரிச்சல் குறைந்து விடும்.



**ஆதிசங்கரர் அருளிய**
**பஜகோவிந்தம்-20**

*பகவத்கீதா கிஞ்சித் அதீதா*
*கங்காஜல லவ கணிகா பீதா:।*
*ஸக்ருதபியேந முராரி ஸமர்சா க்ரியதே*
*தஸ்ய யமேன ந சர்சா ॥*

**இந்த பாடலில் பகவத்கீதை, கங்கை ஜலம் மற்றும் மஹாவிஷ்னு பூஜை ஆகிய மூன்றின் பெருமைகளை அற்புதமாக விளக்குகிறார்.**

**எவனால் கொஞ்சமேனும் பகவத்கீதை படிக்கப்பட்டதோ, ஒரு துளியேனும் கங்கா ஜலம் குடிக்கப்பட்டதோ, ஒரு தடவையாவது நாராயணன் மீது அர்ச்சனை செய்து பூஜை செய்யப்பட்டதோ, அவனுக்கு யமதர்மனால் சர்ச்சை ஏதும் ஏற்பட்டது கிடையாது.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

**வலிப்பு நோய்க்கு :**

சித்தரத்தை, வசம்பு, சரஸ்வதி இலை சூர்ணங்களை ஒவ்வொன்றையும் 30 கிராம் அளவு கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் மூன்று வேளையாக உணவுக்கு 15 நிமிடங்களுக்கு முன்பாக வேளைக்கு ஒரு கிராம் வீதம் தகுந்தளவு தேனோடு பருகி வந்தால் நோயின் தன்மை குறைந்து விரைவில் குணமாகலாம்.




**தொண்டை வலி :**

சித்தரத்தை, ஓமம் கலந்து சூடாக்கிய சூர்ணம் மஞ்சள், யவக்ஷரம், நெல்லிக்காய் சூர்ணம் சமமாக கலந்து வைத்துக்கொண்டு காலை, மாலை வேளைக்கு 2–3 கிராம் பொடியில் ஒரு தேக்கரண்டி தேன் அரைத் தேக்கரண்டி நெய் கலந்து பருகிவந்தால் நன்மை ஏற்படும்.

**புளியேப்பம் நெஞ்செரிச்சல் :**

சித்தரத்தை, இஞ்சிப்பொடி ஒவ்வொன்றும் 20 கிராம், ஓமம் வருத்து செய்த சூர்ணம், மிளகுப்பொடி, சைந்தவலவணம் பொடி ஒவ்வொன்றும் 5 கிராம் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். நாள்தோறும் 2 முறை 100 மி.லி. இளஞ்சூட்டு நீரில் அரைத் தேக்கரண்டி வெல்லம் போட்டு கலந்து ஒரு கிராம் பொடியைப் போட்டு கலந்து பருகிவந்தால் விரைவில் குணமாகும்.

மேலே கூறப்பட்டுள்ள ஔசத மூலிகைகள் அனைத்தும் நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கும்.

## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. தைத்தியர்களாக.
2. 10வது (தஸம) அத்தியாயம்.
3. இந்திரத்யும்னன் (சுரசன்).
4. இராமாயணம் தாடகி, பாகவதம் பூதனி.
5. மஹாலக்ஷ்மியின் அவதாரம்.
6. வைவஸ்வத மன்வந்தரம்.
7. ஸ்ரீதேவி-சத்வ குணம், பூதேவி-ரஜோ குணம், துர்கா தேவி-தமோ குணம்.
8. லவகுசா
9. ஏகாதசி.
10. அதல, விதல, சுதல, ரசாதல, தாரதல, மஹாதல, பாதாள லோகங்கள்.

தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி
ஆலயத்தை (பூரகமந்தா, சதும் வட்டம், சித்தூர் மாவட்டம்)
20-11-2020 அன்று திருமலை திருப்பதி தேவஸ்தானம்
தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தபோது**

**சாஸ்த்திர முறைபடி இந்நிகழ்ச்சி ஆந்திர மாநில
பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர்
திரு. பெத்திரெட்டி ராமசந்திர ரெட்டி அவர்கள்
தலைமையில் நடைபெற்றது**









**திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் மிக விமரிசையாக நடைபெற்ற
லக்ஷகுங்குமார்ச்சனை மஹோத்ஸவத் திருக்காட்சிகள்**



SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams.   printing on 25-11-2020.
Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020